உ

சிவமயம்.

ம-ா-ா-ஸ்ரீ

வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள்

இயற்றிய

# நெல்லைச் சிலேடை வெண்பா

மூலமும் குறிப்புரையும்.

660

ம-ா-ா-ஸ்ரீ

கவிராஜநெல்லையப்பபிள்ளையவர்களாலும்

ம-ா-ா-ஸ்ரீ அருணாசலக்கவிராயரவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

ப. சு. நடேசமுதலியாரால்

சென்னபட்டணம்.

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1893.

[All rights reserved]

6660

உ

சிவமயம்.

# நெல்லைச் சிலேடை வெண்பா

## மூலமும் குறிப்புரையும்.

இவை

திருநெல்வேலிஜில்லா தென்காசித்தாலூகா

வெள்ளகால்

ம-ா-ா-ஸ்ரீ அ. பழநியப்பமுதலியாரவர்கள்

குமாரர்

**சுப்பிரமணியமுதலியாரால்**

இயற்றப்பட்டு,

திருநெல்வேலி

ம-ா-ா-ஸ்ரீ கவிராஜநெல்லையப்பபிள்ளையவர்களாலும்

சிவகாசி

ம-ா-ா-ஸ்ரீ அருணாசலக்கவிராயரவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

யாழ்ப்பாணம். ஏ. கந்தையமுதலியாரால்

சென்னபட்டணம்:

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1894.

[*All rights reserved*]

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIB.
TIRUVANMIYUR, MADRAS

உ

சிவமயம்.

## நெல்லைச் சிலேடை வெண்பா.

# சிறப்புப்பாயிரம்.

---

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

**ம-ா-ா-ஸ்ரீ வே-சாமிநாதையரவர்கள்**

இயற்றியது.

அடியார்க்கு நோய்முத்தம் வேய்முத்த மருளியெழுந்
　　தருளி வாழுங் [பாக்
கொடியார்க்கு மணிமாடத் திருநெல்லைச் சிலேடைவெண்
　　குலவச் செய்தான்
கடியார்க்கும் பொழில்வெள்ளக் காற்பழநி யப்பமுகில்
　　காதற் செல்வன்
மிடியார்க்கு நிதிநிகர்சுப் பிரமணிய நயசுகுண
　　விழுமி யோனே.

---

ம - ா - ா - ஸ்ரீ

**முத்துக்குமாரசுவாமி கவிராஜரவர்கள்குமாரர்**

திருநெல்வேலி

ம - ா - ா - ஸ்ரீ

**கவிராஜ நெல்லையப்ப பிள்ளையவர்கள்**

இயற்றிய செய்யுட்கள்.

---

திருமணங் கமழுங் கமலமென் மலரிற்
　　றிசைமுகச் செம்மல்செவ் வாயாற்
பெருமணங் கடக்கு முந்திமா தவன்விண்
　　பிலத்திலுந் துருவிட நீண்ட
வருமணங் கடக்குஞ் சரமுரித் தவரு
　　மானநல் வரதர்பொன் மாலை
தருமணங் கமரு மேனியர் நெல்லைத்
　　தலம்வளர் தானநா தருக்கு. (க)

வழுதிநா டதனிற் பொன்னகர் மான
வளங்கெழு சோழவ டானிற்
பழுதிலா திருந்தச் செழியநாட் டிடைமேல்
பால்வயங் கெழிற்பயோ தரத்தின்
ஞெழுதியார் பொழில்சூழ் வெள்ளகா லென்னுந்
தூயமா நகரில்வான் றன்னி
யெழுதிவா கரனைப் பொருவவா துலர்தம்
மிரவொழித் திருந்தவோ ரேந்தல். (௨)

அத்தநீ டியநல் லாரையில் வாழ்நம்
மழகப்ப பூபதி யங்கச்
சித்தசன் தளவாய் குமாரசு வாமிச்
சேரன்செங் குவளையங் தெரியற்
கொத்தலர் புயத்தில் விருவர்தம் பெருமைக்
கோக்குடிச் சம்பந்தங் கொண்ட
வுத்தம னருமைச் சுப்பிர மணிய
னுஞற்றிய தவத்தில்வந் துதித்த. (௩)

பணமலி நிதிக்கோன் றன்னையொப் பாகும்
பழநியப் பன்றரு பாலன்
குணமலி நந்த நிதிகவி மாரி
கொழித்திடுஞ் செந்தமிழ்க் கொண்மூ
விணமதி வதனன் கருணைதத் திடுநல்
விழியினன் வியப்புறும் விவேகன்
வணமலி தாளத் தார்கிடந் திலங்கு
மணியெழு வனையதோள் வள்ளல். (௪)

வேறு.

வன்னந்தந் தாதரிக்கு வளைகளங்கண் மாதொர்கல்லில்
வரத்தாள் வைத்தோன்
முன்னந்தந் தாதரிக்கு குவெனமன்றி னடித்திடுநம்
முதல்வர் செல்வத்
தன்னந்தந் தாதரிக்கு விலுமணுகா தருள்சம்பு
சரண்போற் றியார்க்கும்
அன்னந்தந் தாதரிக்கு மெய்கள்சுப்ர மண்யனெனு
மதுல னன்பால். (௫)

வேறு.

அருண்மணங் கமழும் பொருளினின் சுவையும்
மறைதரு சொற்சுவை யமைவும்

6660
...UVANMIYUR, MADRAS



மருவுற விசைத்த சிலேடையின் வியப்பும்
வாய்த்தநற் கற்பனை வனப்பும்
தருபத மதுரங் கொழித்திடு பொலிவுஞ்
சார்திரி புயமகத் தகவுந்
தெருடரும் யாரும் புகழ்தர நெல்லைச்
சிலேடைவெண் பாத்தமிழ் செப்பி. (௬)

ஆயிரத் தறுபத் தாறெனு மாண்டி
லணுகுறும் விகிர்தியாம் வருடம்
ஏய்தரு மகர மாமதி மருவு
மெட்டிட னேகமார் தேதி
வாய்தரு புந்தி வாரநற் பகற்று
வாதசி யுந்திங்க ளுளுந்
தோய்தரு கும்ப லக்கின முஞ்சேர்
சுபதினம் பத்திமை தோன்ற. (௭)

வண்ணவான் குன்றின் மணிவிளக் கென்ன
வளர்தொண்டை மண்டல மரபு
கண்ணகன் ஞால முழுவதும் விளங்கக்
கருதிமுற் கவியினிற் கழறும்
பண்ணவா வின்சொற் காந்திம தித்தாய்
பங்கமர் பரமர்மெய்ப் பத்தர்
எண்ணமா ரவ்வேய் வனத்தர்சந் நிதியி
லினிதரங் கேற்றினன் மாதோ. (௮)

---

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தாலூகா

குன்னூர்

ம - ள - ள - ஸ்ரீ

## பெரியவீட்டுக் குமாரசுவாமி முதலியாரவர்கள்

இயற்றியது.

---

கல்லைவெண்பா னேர்முலைசொற் காந்திமதி யம்மைபங்கர்
நெல்லைவெண்பா மாலை நிகழ்த்தினன்—றொல்லைப்
பிறவிதவிர்ப் பான்சுப் பிரமணிய னென்னுந்
திறவிதர ணன்றமிழ்தேர்ந் தே.

---

### திருநெல்வேலி ஜில்லா
சிவகாசி
ம-ா-ா-ஸ்ரீ
## அருணாசலக் கவிராயரவர்கள்
இயற்றியவை.

---

சீர்கொண்ட சொற்சுவை பொருட்சுவை சிலேடைச்
செழுஞ்சுவை முதிர்ச்சி செறியுந்
திரிபுயம கங்கற்ப னைச்சுவைகண் முதலிய
சிறப்புறூஉ நெல்லை வெண்பா
வேர்கொண்ட வெள்ளகால் வள்ளல்சுப் பிரமணிய
விறைவனுங் கவிஞ ரோறிங்
கியற்றின னதுகண்டு புகழேந்தி யன்றியி
தியம்புவா ரில்லை யென்னப்
பேர்கொண்ட பாவல ருரைத்தசொன் முழுதும்
பிழைத்ததிஃ தென்ன பெற்றி
பேசுவீ ரென்பார்க்கு யேலோர் மொழிந்தசொற்
பிழைபடுத லில்லை யென்றும்
பார்கொண்ட விவனுமுயர் கல்வியாற் கேள்வியாற்
பரவுபுக ழேந்தி யான
பண்பினற் பாடின னென்றுரைப் பாமறிஞர்
பலருமொப் பும்ப டிக்கே.

முல்லைச்சிலேடைவெண்பான்மொய்குழற்சொன் மாதங்கர்
நெல்லைச்சிலேடைவெண்பாநிர்மித்தான்—சொல்லைப்
பிரபலமாக்கொண்சுப்பிரமணியவள்ளல்
வரபலமாக்கொள்வாருள்வார்.

---

சிவமயம்.

# நெல்லைச் சிலேடை வெண்பா.

### விநாயகர் துதி.

எல்லைவெண் பான்மதியை யேர்நயன மாவுடையார்
நெல்லைவெண் பாவை நிகழ்த்தவே—சொல்லருள்வா
ராரும்பொல் லாப்பிள்ளை யாமெனுமெ னுள்ளத்து
மாரும்பொல் லாப்பிள்ளை யார்.

### சமயா சாரியர் துதி.

என்புசிலைசெங்கனெரியேழைபுனைபொன்பரியாக் [டேன்
கன்பர்பதப்போதெனெஞ்சத்தார்ந்தொழுக்கு - மின்பருட்
பொங்கியெழீஇவாயுமுற்றென்புன்கருத்துஞ்சொல்லும்வி
யங்கவைதித்திப்பிக்குமால். [ரா

---

## நூல்.

ஆட     யாற் நீரத் தகழு மகிழ்ப்புறமு
நீட    வனைஞ்சேர் நெல்லையே—கேடி
நெ    மாதங் கத்தூரியா ரொண்டவர்கள் விட்ட
கருமாதங் கத்தூரியார் காப்பு. (க)

கோலமணிப் பூந்தடமுங் கொங்கார் நெடும்பொழிலு
நீலமணி வானந்தேய் நெல்லையே—பாலுறவேய்த்
தோளியுட னுடினன் றெங்தோ மெனமுன்பு
காளியுட னுடினன் காப்பு. (உ)

மல்லற்பூஞ் சோலையினு மள்ளருழு பண்ணையினு
நெல்லிக்காய் மேன்மையுறூஉ நெல்லையே—வெல்லற்காம்
வேலேறு கைக்குமரன் வேழமுகன் றந்தை வெள்ளை
மாலேறு கைக்குமரன் வாழ்வு. (ங)

கூர்கடவெங் குஞ்சரமுங் கோதையர்பூங் கொங்கைகளு
நேர்கந் துகத்தாக்கு நெல்லையே—நார்கொளன்ப
ராலியமதிக்குறையா ராகச்செய் வார்சடைமேல்
வாலியமதிக்குறையார் வாழ்வு (ச)

சேடேய் சுரும்புமலை சேர்பொழிலும் வான்வாச
நீடே டுடைக்கவுறூஉ நெல்லையே—பீடேறுஞ்
சக்கரக்கஞ் சக்கரத்தான் ருதாமுன் ஞோர்வினைகண்
மிக்கரக்கஞ் சக்கரத்தான் வீடு. (ரு)

சுத்தசைவர் நாவினுக்குஞ் சூராரிரு திண்டோட்கு
நித்தனைந்தெ ழுத்தேயு நெல்லையே—கைத்தலத்து
மாதர்மா னங்கெடுத்தார் வண்டாரு காவனத்து
மாதர்மா னங்கெடுத்தார் வாழ்வு. (சு)

ஆதியர்கள் பாலர்களு மாயர்கள்சி ருருநவ
நீதமின்பால் வாய்க்கவரு நெல்லையே—சோதிக்
கருடத் துவசநத்தன் காணுக் கழலா
னருடத் துவசநத்த னூர்வு. (எ)

ஏரார் சிவாலயமு மேகதந்தற் பேணரு
நேரா னில்யமேய் நெல்லையே—சீரார்
தொடிவா ளிடத்தான் றுவக்கிச் சுவடீ
வடிவா ளிடத்தான் மனை. (அ)

ஆர்க்கும் களியாட் டவருஞ்சீ ரும்பொய்கை
நீர்க்கிரீ டிக்குறூஉ நெல்லையே—பார்க்கப்
புவிய கழுமுளத்தன் பூக்கண் புனைந்தான்
செவிய கழுமுளத்தன் சேர்வு. (கூ)

முற்றலில்காய்க் காசையுற்றோர் மூத்தோர்த்தாழ் வோர்கழ
நெற்றி கழலுறூஉ நெல்லையே—உற்றபத்த [னி
ராயவ லம்புரியா ராயவ லம்புரியா
ராயவ லம்புரியா ரார்வு. (கய)

சீறுமத னும்மயலைத் தீர்திறம்போய்ச் செய்திறமு
நீறுதைய லர்குளத்தேய் நெல்லையே—கூறுமிக்கை
வண்ணித்த கல்யாணர் மால்யானைக் கூட்டினர்
ரொண்ணித்த கல்யாண ளூர். (கக)

பொற்றிருக்கோ விற்கழையும் பூம்பழனத் திற்கழையு
நெற்றிக்கண் முத்தனண்ணு நெல்லையே—எற்றுநீர்ப்
பூத்தூ விரதத்தார் பொன்னடியன் பர்க்கருளு
மாத்தூ விரதத்தார் வாழ்வு. (கஉ)

ஏர்வாய்மின் னார்கண் ணிகற்கும் விடநோய்க்கு
நேர்வா ளமருந்தீ நெல்லையே—சூர்வாணி
யங்களங்கொண் மூக்கறுப்பார் வாட்டுவிட முண்டொளிருந்
தங்களங்கொண் மூக்கறுப்பார் சார்பு. (௧௩)

தேறுசைவ ருங்கணவர்த் தீர்ந்தோரும் வெண்ணிலவி
னீறு புனைந்திடூஉ நெல்லையே—மாற
னடிச்சுவடு வேய்ந்தா ரடியார் சிரமே
லடிச்சுவடு வேய்ந்தா ரகம். (௧௪)

ஏத்துமின் னாரும்மவர்முத் தின்வடம்பூண் கொங்கையுமின்
னீத்த வரையேய்க்கு நெல்லையே—மாத்தவத்தோர்
மாதருக்க கற்றுவார் மையலினை மற்றவர்த
மாதருக்க கற்றுவார் வாழ்வு. (௧௫)

காராடு சோலையினுங் கல்விபயில் சாலையினு
நேரோடு வாசிக்கு நெல்லையே— நாரார்நெஞ்
சேயவயங் காவலா னேர்மதுரைச் சுந்தரனு
மேயவயங் காவலான் வீடு. (௧௬)

கோடாத வாய்மையினார் கூற்றும் பொருநையும்
நீடாக மங்கடக்கு நெல்லையே—சேடா
ரிலக்குமினா ராயண னெண்கண்ண னாவி
னலக்குமினா ராயண னாடு. (௧௭)

கார்ச்செறிவார் மாதர்குழற் கற்றையுமெய்ப் பத்தருநன்
னீர்ச்சைவ லக்கணமேய் நெல்லையே—தேர்ச்சியிலா
மக்கடமைப் பாட்டான் வழுத்தார்க்கே முத்திநல்கு
மக்கடமைப் பாட்டா னகம். (௧௮)

சர்வாபிட் டத்தினருந் தானையிலா நாணர்களு
நிர்வாண தீக்கையமொன் னெல்லையே—யொர்வாம
பாகத் திருந்திழையார் பாவனத்தைத் தாள்பற்றார்க்
காகத் திருந்திழையா ரார்வு. (௧௯)

கைதயங்கு வேலுமயற் காளையரு நெய்வோரு
நெய்தலைக்க ணெய்தலுறாஉ நெல்லையே - பைதன்முன்பின்
னின்றென்றற் காற்றகில ரின்றென்றற் காற்றகில
ரின்றென்றற் காற்றகில ரில். (௨0)

போராம்ப னேர்முலையார் பூவாயுந் துர்க்கையுஞ்செந்
நீராம் பலியையுறு நெல்லையே—யாரூரர்
தூதுவிடப் போனகத்தன் சோதிமதி போனகத்தன்
காதுவிடப் போனகத்தன் காப்பு. (௨௧)

பொன்மயினேர் வார்முலையும் போற்றடியார் நெஞ்சகமு
நின்மலையங் கங்கடுக்கு நெல்லையே—முன்முவ்
வெயிலு முருத்தெரிப்பா ரேத்துநர்முன் பூதி
பயிலு முருத்தெரிப்பார் பற்று. (௨௨)

காமநுகர்ந் தார்காதுங் கற்பவரல் லார்நாவு
நேமிநா தம்படியா நெல்லையே—வாமக்
குருமைத் திருக்கரத்தார்க் கோதையர்கோ வைதீட்
டுருமைத் திருக்கரத்தா ரார்வு. (௨௩)

வாசித் தவர்சபையின் மன்பிடா ரன்குழலி
னேசிக்கப் பாப்பாடு நெல்லையே—பேசைங்
கிருத்தியன டத்தினான் கேடிலா யோகர்
கருத்தியன டத்தினான் காப்பு. (௨௪)

தீர்கணவர் மாதர்நெஞ்சிற் றேங்கொன்றை யாலயத்தி
னேர்கனைவில் வந்தழைக்கு நெல்லையே—வார்கவுளின்
மன்மதனால் வாயார் மகனார் மயற்றுன்பு
மன்மதனால் வாயார் மனை. (௨௫)

பாலர்தலை பத்தான் படத்தைமய லோர்மதனை
நீலங்கை யேந்தலெனு நெல்லையே—கோல
முதுவையை யாற்றினான் முன்னிமய மீது
வதுவையை யாற்றினான் வாழ்வு. (௨௬)

சிற்குருசீ டற்குநோய் தீர்ப்போனான் வேண்டாற்கு
நிற்குணசை வந்துறுமென் னெல்லையே—யெற்குவினை
யோடு தரித்திரந்தா னோடோ முற்றினா
னோடு தரித்திரந்தா னார். (௨௭)

ஏர்வைத்த மள்ளருநா ணேற்றிடுவின் மள்ளர்களு
நேர்வைக்கோற் போர்புரியு நெல்லையே—சார்வுற்ற
வொற்றைக் கலைத்தலையா ருள்ளன்பி லார்முமலப்
பற்றைக் கலைத்தலையார் பற்று. (௨௮)

விட்டுணுவா வானோற்போர் வெய்ய புறமதநூ
னெட்டுருப் பண்ணவரா நெல்லையே—யெட்டெனத்
தொக்கவிருந் தோடிரண்டார் தூமுகமொவ் வொன்றனினு
மிக்கவிருந் தோடிரண்டார் வீடு. (௨௯)

ஏர்புணரு மேகலையு மில்லமும்பந் தாடிடமு
நேர்புனிதம் பந்துறவா நெல்லையே—யோர்பைய்
கனிபுணர் கையார் கனிபுணர் கையார்
கனிபுணர் கையார் களன். (௩௦)

வாடுமிடை யார்தனத்து மாயோ கியர்மனத்து
நீடவம்ப டர்ந்திடுஉ நெல்லையே—கூடற்
றெருவருத்து வர்த்தகத்தன் செம்மலரோன் பொய்ச்சொ
லருவருத்து வர்த்தகத்த னூர்வு. (௩௧)

கோதாரீ யானைக் கொடுப்பானை யாசகர்க
ணீதாதா வாவென்னு நெல்லையே—தூதாவோர்
மாதங் கடைவரலார் வந்தவலி தீரவுமை
பாதங் கடைவரலார் பற்று. (௩௨)

கோலவில்லாள் கொண்டோனைக் கொண்கனில்லை முன்னி
னீலவண னேர்வையெனு நெல்லையே—சாலச்சோ [லையி
காந்திமதி யாகன் கழல்விழச்சென் னிக்கண்வைத்தான்
காந்திமதி யாகன் களன். (௩௩)

கூர்புலவிக் கோதையருங் கூறுபண மில்லாரு
நேர்புறங் காட்டுறூஉ நெல்லையே—நீர்புனைந்த
மின்ப வளத்தாழ்வார் வேணியார் சத்திமுலை
யின்பவளத் தாழ்வா ரிடம். (௩௪)

வர்மித்து வாழ்கின்ற வாழ்க்கையருங் கம்மியரு
நிமிர்த் துருவாக்கு நெல்லையே—கர்மத்தைத்
தேவென்ற மையலார் தீமுனிவர் விட்டமத
மாவென்ற மையலார் வாழ்வு. (௩௫)

ஆக்கமுன்னிச் சேணெறிச்செ லன்பர்களு ஞானியரு
நீக்கமுன்னி னைந்திடுஉ நெல்லையே—தேக்குபுக
ழோதியன்ப ராயினு ருருழிப்பார் மாலோடு
வேதியன்ப ராயினர் வீடு. (௩௬)

ஊடாப் புணர்வார்க் குறுமிரவுந் தாமரையு
நீடாக் கணங்கடுக்கு நெல்லையே—பீடார்
பொருநைத் துறையார் புரியார்த நெஞ்சிற்
கருநைத் துறையார் களன். (௩௭)

ஏர்நிறைகன் றுக்கிடைய ரின்செயுட்குப் பாவாணர்
நேர்நிரையின் பாலூட்டு நெல்லையே—பார்நிரம்ப
வுந்தானந் தந்தவத்தா னெண்டலச்சீர் கேள்கணற்குச்
சந்தானந் தந்தவத்தான் சார்பு. (௩௮)

தூத்துறவோர் செம்மனமுந் துங்கநறும் பூஞ்சுனையு
நீத்துவல்லார் வந்தடுக்கு நெல்லையே—கூத்தன்
பொருமிக் கதறுகணன் போற்றவெயி லட்ட
செருமிக் கதறுகணன் சேர்வு. (௩௯)

ஆர்பிழியுண் போருந்தோப் பாக்குநரு நீத்தோரு
நேர்பழங்க ணட்டிடுஉ நெல்லையே—சூர்படுத்தோன்
மாதுருக்கங் காதரனார் மாதுருக்கங் காதரனார்
மாதுருக்கங் காதரனார் வாழ்வு. (௪0)

தூவாச் சிரமத்துத் தூதுணைமுங் குப்பைகளு
நீவார மேய்தரூஉ நெல்லையே—மேவூர்தி
யோதிமத்தி யாந்தமிலா ரொண்ணுவார்க் கண்ணுதார்
ராதிமத்தி யாந்தமிலா ரார்வு. (௪௧)

இச்சையற்ற யோகர்மனத் தின்மனைவர் முன்றிலினி
னிச்சலத்தி யானமுறூஉ நெல்லையே—கச்சி
முகிலாண்ட மாண்டவத்தன் மொய்குழல்பங் கேற்று
னகிலாண்ட மாண்டவைத்த னார்வு. (௪௨)

ஏரிலகு பூங்கொம்பு மெண்ணில் பலதிங்கு
நேரிழை யார்க்கடுக்கு நெல்லையே—சீரியகான்
மாறியபண் பாடினான் மாமதுரை யூரினிற்றே
னூறியபண் பாடினா னூர். (௪௩)

மைத்தார்மின் னார்குழலும் வாள்வீரர் கைவேலு
நெய்த்தோரா னமையேய் நெல்லையே—பைத்தார்
திருப்பாப் பரசினார் சேரார்த்தெற் கன்றித்
திருப்பாப் பரசினார் சேர்வு. (௪௪)

சோபத்தாற் றூர்த்தையர்தஞ் சோரனையா ருங்குகனே
நீபத்தா கத்தாவென் னெல்லையே—மாபல்
விதநோன் புணைதருவார் வெம்பவநீந் தத்தண்டம்
பதநோன் புணைதருவார் பற்று. (சரு)

மைகுறித்துத் தீட்டியகண் மாதருக்கு நெய்வோர்க்கு
நெய்குழல்வாய்ப் பெய்திடுநெல் லையே—கைகுவித்து
வாயின்முத்த மானூர் வணங்குகங்கா ளர்கோவில்
வேயின்முத்த மானூர் விருப்பு. (சசா)

துன்னுமன்பற் காதலியுஞ் சோரற் றொடர்வானு
நின்னில்விட னில்லென்னு நெல்லையே—துன்னலனைக்
கோலியிட்ட வித்தகத்தன் கூற்றுதைத்தோன் செந்நெலுக்கு
வேலியிட்ட வித்தகத்தன் வீடு. (சஎ)

ஏர்க்கானம் பாலுமஃ தேய்சோலை யும்படிவார்
நீர்க்கார் மணற்கடுக்கு நெல்லையே—சூர்க்காதுஞ்
செவ்வே லுவனத்தன் சேய்மைத் துனனெனக்கொள்
செவ்வே லுவனத்தன் சேர்வு. (சஅ)

ஓதறிநூர் வேந்தைமின்னு ருண்மனைவி யல்லானை
நீதந்தை யாயென்னு நெல்லையே—போதத்
தவிருத் தமனித்த னுங்கிளைஞன் சேயா
மவிருத் தமனித்த னூர்வு. (சகூ)

மாரனும் வேதியரும் வாவியுஞ்சி வந்துதைய
வேரங்கஞ் சம்பூக்கு நெல்லையே—வாரளிற்
செய்யக லாதனத்தன் செய்யக லாதனத்தன்
செய்யக லாதனத்தன் சேர்வு. (ருo)

கூர்க்குமெய்வெப் போடு குளிப்பவருந் தண்டலையு
நீர்க்கொண் டலலையுறூஉ நெல்லையே—சீர்க்கு
னனவரத தான னயக்கவி சொற்று
னனவரத தான னகம். (ருக)

ஈரருத்த மாமயல்கொ ளேழை யவன்மேவ
நேரொருப்ப டுக்கீரென் னெல்லையே—மேரு
விவர்புடைவை யங்களிப்பா னேழையர்க்கு மால்போற்
கவர்புடைவை யங்களிப்பான் காப்பு. (ருஉ)

நேர்வா யமுதமெனு நேயன் றனைமனையா
ணீர்வேட்கை மிக்கீரொன் னெல்லையே—ஏர்வா
யுருவரக்கொன் றிட்டா ருடல்பவர்ப்பேய்க் கூறு
வெருவரக்கொன் றிட்டார் விருப்பு. (௫௩)

வார்கதுப்பார் கன்னமுவ மானத்தாற் றானத்தா
னேர்கண் ணடியுறூஉ நெல்லையே—சீர்கடியுங்
காமத் திகைக்கையார் காணார்வே தப்பரிமே
லாமத் திகைக்கையா ரார்வு. (௫௪)

மெத்துபொன்மன் றும்போர் விடாதுசெய்வோர் கைவாளு
நித்தனித்த னஞ்செய்துறு நெல்லையே—எத்திறெடும்
வித்தியா சம்பன்னன் மேவா தெனநின்றான்
வித்தியா சம்பன்னன் வீடு. (௫௫)

வாளாளர் கார்க்கலவை மார்புள்ளு மேலுநேர்
நீளா சலமருஉ நெல்லையே—கேளார்ச
மூகமொழிப் பித்தனத்தன் மோகினியா கப்புணர்ந்த
வேகமொழிப் பித்தனத்த னில். (௫௬)

தேறுசிவ பூசைசெயுஞ் சிட்டருமன் னோர்வினையு
நீறுபட்டு டையுறூஉ நெல்லையே—வீறுநட
மூண்டவள ரங்கன் முழுதுகண்ட ராமக்கோன்
வேண்டவள ரங்கன் விருப்பு. (௫௭)

தேரிவரும் வீரர்களின் றெவ்வருமின் னார்கைகையு
நேரிணிலாத் தோற்றிடூஉ நெல்லையே—வாரிமொடு
விந்தமடக் கங்கையார் மெச்சுடுக பூர்ச்சடை யிற்
சந்தமடக் கங்கையார் சார்வு. (௫௮)

பாரோத்தில் லங்கொல்லைப் பான்மடவார் நாயகர்பா
னீராவி யென்றுமுறூஉ நெல்லையே—சீராரு
மாலவாய்க் கூடலா ரவ்வணிக மாதரார்
மேலவாய்க் கூடலார் வீடு. (௫௯)

வாடைகொய்வா ழைபார் மகளா ரமராடி
நீடமுது காற்றுறூஉ நெல்லையே—கூட
லிடையனாய ராளு ரிடையனாய ராளு
ரிடையனாய ராளு ரிடம். (௬0)

ஆதிபனை வாதியு மாதிபன் வாதியையு
நீதிகைப் பற்றுறுமென் னெல்லையே—ஓதிக்
கரிக்குருவி கற்பித்தார் கார்நிறநாற் கோட்டுக்
கரிக்குருவி கற்பித்தார் காப்பு. (௬௧)

ஆரமுலை யாலிடையில் லாள்புலப்பாற் கேண்மிகவெங்
நேரமுனை யுற்றிடத்தாழ் நெல்லையே—நீரொடுபுல்
கல்லேற்றுக் கூட்டினார் காற்கணன்ப னைப்புகழுஞ்
சொல்லேற்றுக் கூட்டினார் சூழ்வு. (௬௨)

காருறுமுன் னம்வருகொண் கன்றன்றே ரக்கொண்க
னேரி யனைப்பொருவு நெல்லையே—சேரனுக்கு
மாதுரி யங்கடந்தார் வண்பா சுரமுய்த்தார்
மாதுரி யங்கடந்தார் வாழ்வு. (௬௩)

வாயநட்புக் கொண்டாரும் வாஞ்சைவிருந் தானுரு
நேய மனமடுக்கு நெல்லையே—காய்விற்
செருவுள்ளம் பற்றார் சிவணவன்பற் றார்க்குத்
திருவுள்ளம் பற்றார் செறிவு. (௬௪)

என்றும்விருந் தேற்பாரு மேழையர்கா தும்மளவா
நின்றவிருந் தோடுவந்தார் நெல்லையே—துன்றும்
புரிவார் சடையார் புரிவார்க்கின் பென்றும்
புரிவார் சடையார் புரி. (௬௫)

நீர்நசையுந் தெவ்வருயிர் நீங்காமை யுந்தோற்ற
நீரிற்புல் வாய்க்கவியா நெல்லையே—சேரும்
பொருப்புக் கொடிச்சியான் போற்றுதந்தை பொல்லார்
விருப்புக் கொடிச்சியான் வீடு. (௬௬)

தேராசான் முன்புசிறார் செங்கதிரோன் முன்பவன்க
னேராத வம்பொழியு நெல்லையே—நாரார்
பசுவே தனைத்துறுவார் பார்புகழ்கோ விற்கட்
பசுவே தனைத்துறுவார் பற்று. (௬௭)

தெய்வீக வாலயத்துத் தீபந் தறியுடைமை
நெய்வார்த் தெரித்திடூஉ நெல்லையே—மெய்வாய்ந்த
நீதி னெறிகல்லா நீள்சாக் கியப்பெயரோன்
கோதினெறி கல்லான் குடி. (௬௮)

பாரியர்சீர் தேர்ந்துமணப் பார்களுக்கு மிந்நூற்கு
நேரிசைவெண்பாவைநுறூஉ நெல்லையே—யேரிசைவெள்
ளன்னஞ்சு ணைத்தலையா ராரூரர்க் கன்பர்வெய்ய
வன்னஞ்சு ணைத்தலையா ரார்வு. (சுகூ)

நாரியரும் யாசகரு நாமகள்கச் சுங்கஞ்ச
னேரக் கழல்கையுறூஉ நெல்லையே—நாரணன்கண்
ணப்பனக ரிய னப்பனக ரிய
னப்பனக ரிய ரார்வு. (எ0)

இன்னைப் புதுக்கனியே தேடுநருங் கூர்விளைவு
நென்னற் பழனத்தா நெல்லையே—முன்னோர்
பெருவருத்தப் பாட்டினன் பேணச்சொல் கொய்தென்
றிருவருத்தப் பாட்டினன் சேர்வு. (எக)

போரி னணையிற் புறங்கொடுப்பா னைக்குமரர்
நீரினுனை நேர்விநொது நெல்லையே—பாரிமுலை
மாவடு வைத்தகத்தன் மார்பின்வைத்தான் வன்னியின்முன்
மாவடு வைத்தகத்தன் வாழ்வு. (எஉ)

கற்காதான் கற்பழிமங் கைசிரிக்கக் கண்டோர்க
ணிற்கா முறுவலெனு நெல்லையே—தெற்கார்
குணக்கோடு மாற்றினன் கோலவரா கத்தின்
றிணக்கோடு மாற்றினன் சேர்வு. (எங)

தேர்புலவோ ருங்குருபாற் றீக்கைசெய்து கொள்வோனு
நேர்புதனை யுங்கொடுக்கு நெல்லையே—சோர்பின்றி
வாகாய கங்கையினார் வன்னியுடை யார்சடையா
ராகாய கங்கையினா ரார்வு. (எச)

வேட்டபினுண் டார்சோலை மிக்க விரும்பணைமே
னீட்டித் துறக்கமுற்று நெல்லையே—யூட்டிவளர்த்
தூன்றுறுகோ லங்காவா ரொண்பதமே போற்றிடுவார்க்
கூன்றுறுகோர் லங்காவா ரூர். (எரு)

ஏற்றுசைவா சாரியரு மில்லஞ் சமைப்பவரு
நீற்றிற் சுவர்க்கமல்கு நெல்லையே—நோற்றுக்
கணித்திமைய யக்கமுற்றார் காண்பவர்சென் னிக்கண்
மணித்திமைய யக்கமுற்றார் வாழ்வு. (எசு)

ஐதமரும் வாச்சியசா லையிலன்ன சத்திரத்தி
னெய்தனிலத் தியாழுறூஉ நெல்லையே—கைதங்கி
வீணாகா நத்தன் விழியுணிவான் கூடலிற்செய்
வீணாகா நத்தன் விருப்பு. (எஎ)

வீரருக்குப் போரிலங்கை மீதிற்சே ரார்செவ்வாய்
நேரமுது கிட்டிடூஉ நெல்லையே—பாரி
திருக்கண் புதைத்தமெய்யன் சிக்கிமுனி மின்னார்
திருக்கண் புதைத்தமெய்யன் சேர்வு. (எஅ)

கூண்டகையாண் ணுண்டும்பூ நாகமும ரும்பேட்டு
ணெருண்டிட்டம்ப டுத்தணையு நெல்லையே—தொண்டர்க்
கினிதவநி வந்தவ ரென்கனான் காணுமே
நனிதவநி வந்தவர் நாடு. (எகூ)

நாரியர்க வானு நகிலுநெஞ்ச மும்மாலை
நேரம் பிடிக்கையுறு நெல்லையே—யாரணத்தி
னந்தரங்கத் தானனத்தா னந்தரங்கத் தானனத்தா
னந்தரங்கத் தானனத்தா னார்வு. (அ0)

காமனுமே வேட்குமணங் காருமவர் கண்கணு
நேமவுணர் வைப்படுக்கு நெல்லையே—தேமலரோ
னுச்சிதா னந்த னுயர்பதந்தான் றேடநின்ற
சச்சிதா னந்தன் றலம். (அக)

ஏர்மிக்க கேளையில்லு மில்லவளைக் கேள்வனுமுன்
னீர்முத்தந் தாரீரான் னெல்லையே—சேர்முத்தி
மாசுபத வம்படையார் மாட்டுநல்கா ராமனுக்கீ
பாசுபத வம்படையார் பற்று. (அஉ)

போர்நவில்க ளத்திண்மயிர் போற்றுமபி மானிநெஞ்சி
னோர்நரைவாட் டாக்கழிக்கு நெல்லையே—கார்நஞ்சுண்
வாய்ப்ப வளத்தத்தன் மாயவற்குத் தங்கையென
வாய்ப்ப வளத்தத்தன் வாழ்வு. (அங)

மெச்சு முனிவரரு மெய்ஞ்ஞான தேசிகரு
நிச்சத்த போதனஞ்செய் நெல்லையே—யிச்சை
யுளத்திருத்தஞ் செய்வார்க் குடல்பொடித்தா ரென்னை
மௌத்திருத்தஞ் செய்வார்க்கு வீடு. (அச)

மாளாநின் றாரும் வதுவரருந் துஞ்சான்மா
நீளாதே விக்கடுக்கு நெல்லையே—தாளே
மனத்தெழுதப் பட்டார் வழுத்துவந்தன் னார்க்குக்
கனத்தெழுதப் பட்டார் களன். (௮௫)

தேர்காட்டு சேனையுமச் சேனையினை மூந்தாறு
நேர்காற் றுவசமுறாஉ நெல்லையே—வார்காதிற்
றோடலங்கம் பைக்கத்தன் றோய்வார் பலமொழிக்கும்
பாடலங்கம் பைக்கத்தன் பற்று. (௮௬)

தையலரு மெய்யறிவாற் சாரங்கொள் ளார்மனமு
நெய்யரியிற் சோதையுறு நெல்லையே—மையலையோர்
வேதியன்றீ ரப்பணினான் வேணியில்விண் ணின்றும்மண்
மீதியன்றீ ரப்பணினான் வீடு. (௮௭)

வர்த்தனனா னத்தைவிழை வாருந்தா தாபொருளு
நிர்த்தனத்து மாதரமா நெல்லையே—கர்த்தனார்
பாயத்த மானார் பணைபுரத்தார் மீதுபோர்க்
காயத்த மானா ரகம். (௮௮)

ஓர்சொல்லி னோர்தங்க ளுண்மையும்வ யல்வளமு
நேர்சொல்லிக் காக்குறூஉ நெல்லையே—சீர்சொல்லி
வாழ்த்து முழுவலார் மார்க்கண்டிக் காவெமனைத்
தாழ்த்து முழுவலார் சார்பு. (௮௯)

ஓடையினீ ருந்தருங்கை யுங்குறங்குங் கற்பினரு
நீடருந்து திக்கையமேய் நெல்லையே—நாடுசங்கை
யாலமண்டை யோட்டத்த னாலமண்டை யோட்டத்த
னாலமண்டை யோட்டத்த னார்வு. (௯௦)

சர்வா பரணமினார் தம்மனமும் பாதுகையு
நிர்வா கனன்புணரு நெல்லையே—சர்வேசர்
மாசன்மார்க் கத்தர் வணங்கொன் பதிற்றேழு
தாசன்மார்க் கத்தர் தலம். (௯௧)

மெச்சுசிவபூசைசெய்வோர்மெய்யுணர்வா னூலுணர்வோர்
நிச்சந்தே கப்பயன்கொ ணெல்லையே—முச்சகமு
முய்கை வரப்படைத்தா ரோர்வந்தி பிட்டுக்கு
வைகை வரப்படைத்தார் வாழ்வு. (௯௨)

போரா டிடுகளத்தும் பூங்கழனிக் கப்புறத்து
நேரா ரணியங்கூர் நெல்லையே—காரார்
பொதியவரைச் சாரலார் போற்றாத பொல்லா
மதியவரைச் சாரலார் வாழ்வு. (௯௩)

தேடுபொரு ளாதிமேற் செல்வோரும் பூம்பொழிலு
நீடமது வைப்பொழியு நெல்லையே—நாடுமையைப்
பங்கி னிருத்தத்தன் பங்கயத்தை யொத்தகைக்க
ணங்கி னிருத்தந்த ணூர்வு. (௯௪)

வீறுசிவ பூசையைமா மெய்யனைத்துன் பட்டுப்பை
நீறளிப்பூ சித்துவக்கு நெல்லையே—யீறிலா
வெட்டான திக்குடையா ரின்கங்கை யாம்வேதற்
கெட்டான திக்குடையா ரில். (௯௫)

ஆர்ந்தபகற் றேர்விருந்தங் காவணைச் சாருறலு
நேர்ந்தழைக்கப் பெற்றிடு நெல்லையே—தீர்ந்தமைக்காத்
தண்டமிழைப் பாடுறுவான் றன்பங்கு கொள்ளுமைகோன்
றண்டமிழைப் பாடுறுவான் சார்பு. (௯௬)

யாழூரையார் நீழலொத்த விற்கதிர்க்கும் புற்குவைக்கு
நீழலென் றும்பெயரா நெல்லையே—வேழக்
கிரக்கமுந்தி யோடுற்று ரோத்தும் பதத்தா
ரிரக்கமுந்தி யோடுற்று ரில். (௯௭)

மாறின்மனைப் பெண்டிர்தவ மாதரங்கூ ழாருநரை
நீறட்டிப் பாலனைநேர் நெல்லையே—நாறும்
படலைத் துழாயினன் பார்வதியென் றின்னே
ருடலைத் துழாயினு னூர். (௯௮)

ஆர்பிரியை கட்குமா ரக்குமர ரைப்பகைஞர்
நீர்பிரிய மாள்வுறுமென் னெல்லையே—ஓர்பரவை
வீட்டுக் கடைக்கணியார் வேட்டடிவாழ்த் தாதார்தம்
மாட்டுக் கடைக்கணியார் வாழ்வு. (௯௯)

மாடார் பொருநையும்பா வாணரும்ப ழக்கடைய
நீடாம் பிரபலஞ்சேர் நெல்லையே—தோடார்
நளினு தனத்த னளினு தனத்த
னளினு தனத்த னகர். (௧௦௦)

MAHAMAHOPADHYAYA
U V SWAMINATHA IYER LIBRARY

சிவமயம்.

# நெல்லைச் சிலேடை வெண்பா.

## குறிப்புரை.

**நெல்லைச்சிலேடைவெண்பா** அரங்கேறும்போதும் முன்னும் பின்னும் வாசிக்கக்கேட்டவர்கள் சில பதப்பிரயோகங்களைப்பற்றியும் வேறுபலவற்றைக்குறித்தும் பலகேள்விகள் கேட்டனர். அக்கேள்விகள் இந்நூலின் அச்சுப்பிரதிகளைப் பார்வையிடுவோர் மனத்தும் தோன்றக் கூடியவைகளா யிருத்தலால் அவைகளுக் கெழுதப்பட்ட விடைக ளடங்கியிருப்பதன்றி இக்குறிப்புரை, இந்நூலைப் பலமுயற்சிகளினிமித்தம் தாங்களே முற்றும் ஆராய்ந்து பொருள்படுத்தப் போதிய அவகாச மில்லாதவர்களுக்குத் துணையாக, திரிபும் சிலேடையுமான பாகங்களின் சொற்களைப் பிரித்துக்காட்டல், பதசாரங்கூறல் முதலிய விளக்கங்களும் அமைந்துள்ளது.

இந்நூல்செய்த யானே இதற்குக் குறிப்புரையும் எழுதியது மரபோஎனச் சந்தேகிப்பாருளரேல், அவர்கள், ஸ்ரீ சுவாமிநாததேசிகர் இலக்கணக்கொத்திற்கூறிய "நூல்செய் தவனந் நூற்குரை யெழுதல்—முறையே......" என்னும் உரைச்சூத்திரத்தைப்பார்க்க. இக்காலத்தும் ம-ா-ா-ஸ்ரீ எம். ஏ. சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய மனோன்மணியத்துக்குத் தாமே குறிப்புரை யெழுதியிருப்பதையும் நோக்குக.

முக்கியமாக விரும்பும் யான் எழுதாது விட்டவைகளேனும், தவறாக எழுதியவைகளேனும் இருப்பின் அவைகளை இதைப் பார்ப்போர் யாவராயினும் எடுத்துக்காட்டிச் சீர்திருத்துவார்களாயின், அவர்களைப் பேருதவி புரிந்தாராகக் கருதுவதன்றி அச்சீர்திருத்தங்களை அடுத்த பதிப்பில் மிக்கநன்றியறிதலோடு உபயோகித்துக் கொள்வேன்.

---

**விநாயகர்துதி.** ஆரும் பொல்லாப்பிள்ளையாலெனும்—எல்லாரும் தீங்குடைய (அறிவிற்) சிறியன்என்று கூறப்பட்ட. பிள்ளையால் என்பதில் ஆல் அசை.

---

**பாட்டு - க.** அகழ்ப்புறம் — அகழுக்குப்புறம்பே சூழ்ந்துள்ள இடம். நீள் தவள அன்னம் சேர்; நீட வள வனம் சேர்.

ஒருமாது (உமை) அங்கத்து உரியார்; கரு மாதங்கத்து (யானையின்) உரியார். ஒண்டவர்—தாருகாவனமுனிவர். யானையுரி கொண்டமை இத்தலபுராணத்தில் காண்க.

**பா - உ.** நீலம் (நீலப்பூவில்) அண்ணி (பொருந்தி) வால் (வெண்மை நிறத்தையுடைய) நந்து (சங்கு) ஏய் (தங்குகின்ற).

நீல்மணிவானந்தேய்—நீலநிறத்தையுடைய அழகிய ஆகாயத்தைத்தேய்க்கின்ற.

பாஙுற...ஞன்—பாகத்தே தங்கும்படி மூங்கில்போலுந் தோளையுடைய பார்வதியின் தேகத்தைவிரும்பினுன். காளியுடன் ஆடினமை இத்தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**பா - ங.** நெல் இக்கு ஆய் மேன்மை உறும்; நெல்லிக்காய் மேல் மை (மேகம்) உறும்.

வேல் ஏறு கைக் குமரன். மால் ஏறு உகைக்கும் அரன்.

**பா - ச.** நேர் (தன்எதிரில் உள்ள) கந்து (கட்டுதறியை) உக (சிதறும்படி) தாக்கும் (மோதும்); நேர் (உவமானத்தை) கந்துகத்து (பந்தின்கண்) ஆக்கும்.

ஆலி (ஆடி) யம திக்கு உறையார். வாலிய (வெள்ளிய அல்லது தூய) மதிக்குறை (குறைபட்ட சந்திரனுகிய பிறையை உடை) யார்.

**பா - ரு.** சேடு—அழகு. வான் (உயர்ந்த) வாசம் (மணம்) நீடு (மிகுந்த) ஏடு (மலரிதழ்களை) உடைக்க உறும். வான்வாச (ஆகாயத்தில் வசித்தலையுடைய) நீள் தேள் (விருச்சிகராசியை) துடைக்க உறும்.

சக்கரக் கஞ்சக் கரத்தான் (விட்டுணு). வினைகளை மிக்கு அரக்கு (தேய்த்தழிக்கின்ற) அஞ்சு அக்கரத்தான்.

**பா - சு.** நித்தன் (நடேசராகிய சிவனுடைய) ஐந்து எழுத்து ஏயும்; நித்தல் (தினமும்) நைந்து எழு (தூண்) தேயும்.

மாதர் (அழகிய) மான் அங்கு எடுத்தார்.

மாதர் மானங்கெடுத்தார் (ஆகியசிவன்) வாழ்வு, நித்தன் (ஆகிய சிவன்) ஐந்து எழுத்துஏயும் நெல்லை என்பது தகுதியன்றென்று சொல்வாருளர். அது தகுதியற்றதன்றென்பது திருவேங்கடமாலையில் "மட்டுவளர் சாலையினு மாதவத்தோர் சிந்தையினும்—விட்டு மதி விளங்கும் வேங்கடமே........" என்னும் பாட்டினுல்விளங்கும்.

**பா - எ.** நவநீதம் (புதுமையாகியநீதி) இன்பால் (இனிமையி ஞல்) வா ய்க்க (அமைய) வரும். நவநீதம் (வெண்ணெயையும்) இன் பால் (தித்திக்கும்பாலையும்) வாய்க்கவரும் (வாயினிடத்துக்கவரும்).

கருடத்துவச (த்தையுடைய) நத்தன். அருள்தத்து வசநத்தன்.

**பா - அ.** ஏகதந்தன்—விநாயகர். நேர் (எதிரில்) ஆன் (நந்தியின்) நிலயம் ஏய்; நேர் (சம்பவிக்கும்) ஆனி லயம் ஏய்.

தொடி (கைவளை) வாளிட (பிரகாசிக்க) தான் (அம்பிகையாகிய தான்) துவக்கி (கைகொண்டுகட்டி) சுவடு ஈ (முலைத்தழும்போடு வளைத்தழும்பும் ஈந்த). வடிவாள்—காந்திமதி அம்பிகை.

**பா - கூ.** களியாட்டவர் — சோலைவிளையாடல் முதலிய விளை யாடல் செய்வோர். சீர் — கீர்த்தி. பொய்கை நீர் (தடாகத்தின் நீரில்) கிரீடிக்குறும் (கிரீடைசெய்யும்—விளையாடும்). பொய் (யை) கை (வெறுத்த) நீர் (தன்மையுடைய) கிரீடிக்கு (அரசனுக்கு) உறும்.

பார்க்கப்புவி......புனைந்தான்—(திருவடிகளைக்) காணப் பூமியை த்தோண்டும் விட்டுணுவின் தாமரைக்கண்ணை (க் காணக்கூடாத கழல் களைக்காண முயன்ற அகந்தை தீர்ப்பார்போல) அணிந்துகொண்டவர்.

செவிய சுடர்முள் அத்தன்—செவ்விய சூலப்படை தாங்கிய கை யை யுடையார்.

**பா - க0.** முற்றலில் காய்க்காசை யுற்றோர் — முற்றாத இளங் காயை விரும்புவோர்; நெற்று இகழல் உறும்; (வணங்குவோர்) நெற்றி கழல் (முதற்றோர்பாதத்தின்மீது) உறும்; நெல் திகழல் உறும்.

பத்தர் ஆய் அவலம்புரியார்—அடியார் கெடுகின்ற துன்பத்தைச் செய்யார். ஆயவலம்புரியார் ஆயவல் அம்பு உரியாரார்வு — இடைக் குலத்துட்பிறந்த (கண்ணன்ஆன) சங்கத்தையுடையார் ஆகிய வலிய அம்பினை யுடையவர் தங்குமிடம். ஆய்தல் கெடுதற் பொருளில்வரு வது காஞ்சிப்புராணம் சுரகரீசப்படலம் உக - ம் பாட்டிற் காண்க.

**பா - கக.** சீறுமதன் (கோபங்கொண்ட மன்மதன்) நீல் (நீல நிறம்) துதை (நெருங்கிய) அலர் (பூவைக்) குளத்து ஏய்.

* மயலைத்தீர்திறம் போய்ச்செய் திறமும் நீறுதையலர் குளத் தேய் — நீறு (விபூதி) மயலைத்தீர் (மோகத்தை நீக்குகின்ற) திறம் (தனக்கு இயல்பானசத்தி) போய் (நீங்கி) செய்திறம் (அம்மோகத்தை யுண்டாக்கும்வலியை) தையலர் (மாதரது) குளத்து (நெற்றியிலே) [தரிக்கப்பெற்ற போது] ஏய் (பொருந்துகின்ற).

---

[* இது பிரபுலிங்கலீலை மாயைபூசனைகதியில் "இனத்தியல்பா மறிவு" என்னும் பாட்டின் கருத்தைத் தழுவியது.]

[இரண்டாவது எழுவாயாகிய நீறு சிலேடைப்பாகத்தில் வருகின்றது. இப்படியே எழுவாய் சிலேடைப்பாகத்தில் வருவதை "வந்து பகைத் தோர்பொரலால் வண்டுமதத் தால்வரலால் — சிந்துரத்த வாறடுக்குஞ் சிங்கையே......" என்னும் பாட்டிற்காண்க.]

கூறும் இக்கை [மதுரையில்] வண்ணித்த (வருணிக்கப்பட்ட) கல் (கல்லாலாகிய) யாணர் மால் யானைக்கு ஊட்டினர்.

வண்ணித்தல் வர்ணித்தல் எனச் சீவகசிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் "கண்ணினாலின்று கண்டாம்" என்றபாட்டுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருப்பதைக்காண்க.

பா - ௧௨. பொற்றிருக்கோவிற்கழை—இத்தலத்துச் சிவாலயத்தின்கணுள்ளமூங்கில். பழனத்திற்கழை—வயலிலுள்ளகரும்பு. நெற்றிக்கண் (ணையுடைய) முத்தன் (சிவன்) அண்ணும். நெற்றி (முற்றி) கண் (கணுவில்) முத்தம் நண்ணும்.

எற்றுநீர்ப்பூத்தூவிரதத்தார் — (கரையின்) மோதுநீரை (ஆடையாக) உடைய பூமியாகிய தூபியையுடைய தேரையுடையார். மா (பெரிய) தூ விரதத்தார் (பரிசுத்த விரதத்தையுடையார்).

பா - ௧௩. கண்ணிகற்கு (விழிப்போர்க்கு) நேர் (எதிர்கின்ற) வாள்அமர் (வாட்போர்) தீ(யும்). விடநோய்க்கு நேர்வாள (மென்னும்) மருந்து (கலந்தஔஷதம்) ஈ (கொடுக்கப்படுகிற).

மங்களம் கொள் மூக்கு அறுப்பார். தம் களம் கொண்மூ (மேக)க் கறுப்பார்.

பா - ௧௪. வெண்ணிலவினீறு (வெள்ளிய பிரகாசத்தையுடைய விபூதியை) புனைந்து (அலங்கரித்து) இடும் (தரித்துக்கொள்ளும்); வெண்ணிலவில் (வெண்ணிலவால்) நீறுபு (நீறி) நைந்திடும் (வருந்துகின்ற).

ந, ண, இரண்டும் ஒன்று மற்றொன்றாக உறழ்ந்துவருதல் ஸ்ரீ ஆறுமுகநாவலர் உரையுடன் பதிப்பித்திருக்கிற மருதூரந்தாதி ௫-வது, ௬௨-வது பாட்டுக்களிலும் சிவஞானயோகிகள் முல்லையந்தாதியில் "தொண்டையனாடு" என்னும் ௭௦ - வது பாட்டிலும் நைடதத்தில் "மருவுபுரி நரம்பிசைக்கும்" என்னும் பாட்டில் "உருகினளன்பால்" என்புழியுங் காண்க.

மாறன் அடிச்சு வடு ஏய்ந்தார் — பாண்டியன் (பிரம்பினால்) அடிக்க அந்த அடித் தழும்பைப் பொருந்தினர். அடிச்சுவடுவேய்ந்தார்—அடிச்சுவட்டை அணிந்தார்.

அடிச்சுவடு வெய்த்தார்:— காஞ்சிபுராணம் நகரப்படலம் முதற்பாட்டில் வைத்து வச்சு என்றாயதுபோல அடித்து அடிச்சு என்றாகியது. சீவகசிந்தாமணி முத்தி யிலம்பகம் கூ-வது பாட்டில் "அடிசிற் கலங்கழீஇக் கருனையார்ந்த விளவானை" என்பதிலும் கூஅ-வது பாட்டில் "மடத்தகை நாணிப்புல்லி மின்னுச்சேர் பரிதி யொத்தான்" என்பதிலும் கழீஇ புல்லி என்பன முறையே கழுவ புல்ல எனப் பொருள்பட்டல்போல அடிச்சு அடிக்க என்று பொருள்பட்ட தென்னலாம். அன்றி ஸ்ரீ சுவாமிநாததேசிகர் இலக்கணக்கொத்து வினையியலில் "அறுதொகை" என்னும் எகூ-வது சூத்திரத்துரையில் "வணிகனறிந்து வந்தபொன்" என்பதில் வணிகன் அறிந்து என்பது வணிகனால் அறியப்பட்டு என்னும் பொருளுடையது என்றதுபோல இங்கு மாறன் அடித்து என்றதற்கு மாறனால் அடிக்கப்பட்டு என்று பொருள்கோடலும் அமையும்.

மேற்படி நூல் மேற்படி இயல் எக-வது சூத்திரத்துரையில் "கோழிகூவிப் பொழுது புலர்ந்தது" என்பதில் கூவி, கூவுவித்து என்று பொருள்பட்டதுபோல அடித்து அடிப்பித்து எனப் பொருள்படுவதாகக் கொள்ளினும் கொள்ளலாம்.

இவ்வாறு தங்கருத்தாவினைகொண்டு முடியாது பிறகருத்தா வினைகொண்டு முடியும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங் களைப்பற்றி ஸ்ரீ ஆறுமுக நாவலர் சென்ற அக்ஷயவருடம் பதிப்பித்திருக்கிற சிவஞான சுவாமிகள் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி அ-வது கூ-வது பக்கங்களிற் கூறியிருப்பதையும் பார்க்க.

பா - கரு. இன்னீத்தவளை—இல் (இல்லை—இல்லறத்தை) நீத்தவளை (துறந்த துறவிசனை) எய்க்கும் (இல்லிலே—இல்லறத்திலே—பொருந்தச் செய்யும்); "மென்முலை—சித்தியிற்பட்ட சிந்தையினாயுமிழ்றி சைப்பட்ட வித்திடு மென்பவே" எனச் சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகம் ருஅ-வது பாட்டிற் கூறியிருப்பது காண்க. இற்றிசைப் படர்வித்திடும்—இல்லறத்திலே செலுத்திடும். இன் (கண்ணுக்கினிய) நீத்தவளை (அருவியுடையமலையை) எய்க்கும் (ஒக்கும்).

மா தருக்கு அகற்றுவார்—பெருஞ்செருக்கை நீக்குவார். மாதருக்கு அகற்றுவார்—மனைவியருக்குப் பெருகச் செய்வார்.

பா - கசா. நேரோடு (நாவல்) வாசிக்கும் (மணக்கும்); நேர் ஏடு வாசிக்கும்.

நார் ஆர் நெஞ்சு ஏய வயங்கு ஆவலான்......சுந்தரனை (க) மே(வி) ய வையங் காவலான். வை.வயய்காவலான் வயங்காவலான் ஆனது "அ ஐ முதலிடையொக்குஞ் சஞயமுன்" என்பதனால். பயம் பையம்

என்றும் பை அநந்தன் பயனந்தன் என்றும் மருதூரந்தாதி ௨௨-வது ௭௨-வது பாட்டுக்களில் வழங்கியிருப்பது காண்க. மேற்கூறிய சூத்திரத் துதாரணங்களையும் பார்க்க.

**பா - ௧௭.** கூற்று (சொல்) நீடு ஆகமம் கடக்கும். ஆகமங் கடக்குமென்றது உபசாரம், ஆகமம்போல அழியாத்தன்மை யுள்ள தென்றபடி. பொருநை (தாமிரபருணி) நீள் தாகம் அங்கு அடக்கும்.

இலக்குமி, நாராயணன், எண்கண்ணன்—பிரமன், நாவில் நலக்கும்மின் (சரசுவதி) ஆராய் (இன்ற) அன்னம்.

நலக்கும் என்னும் பதம் காஞ்சிப்புராணம் திருக்கண்புதைத்த படலம் ௨௦௯-வது பாட்டில் "நன்னதி பரந்தொளிர் பரப்பெனநலக்கும்" என்ற கடைசியடியில் வருதல் காண்க.

**பா - ௧௮.** நல் நீர் சைவலக்கணம் (நல்லநீரிலுள்ள சைவலப் பாசியின் கூட்டம்) ஏய் (நிகர்கின்ற); நல் நீர் சைவ லக்கணம் (நல்ல தன்மையுடைய சைவமதத்தின் இலக்கணத்தை) ஏய் (பொருந்தும்).

மக்கள் (மனிதர்) தமைப் பாட்டான் (பாட்டுறுவன்); அ (அந்த)க் கடைப்பாட்டான் (கடைப்பாட்டையுடையவர்).

**பா-௧௯.** சர்வாபீட்டமுமமைந்த துறந்தோர் நிர்வாண தீக்ஷை யுடையாரென்று சொல்லப்படும்; ஆடையிலாது முனிப்போர் நிர்வாணத்தை யுடைய தீய கையமென்னப்படும்.

ஓர் (ஒரு) வாமபாக(த்துள்ள) திருந்து இழை (யாளாகிய பார்வதியைஉடை) யார். பாவனத்தை — புனிதத்தை. ஆகத்து இருந்து இழையார்.

**ஒரு,** ஓர் எனவருதல் சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் ௧௦௪-வது பாட்டில் "ஒரையங்காண்பவர்க்கு" என்பதிலும், இலக்கணையாரிலம்பகம் ௧௯௦-வது பாட்டில் "பெண்ணோர்பால் கொண்டதோத்தார்" என்பதிலும் காண்க.

**பா - ௨௦.** கையிலே பிரகாசிக்கின்றவேல் நெய்யை உச்சியில் பொருந்துதலுற்ற, மையலையுடையகாளையர் நெய்தலினது அழகையுடைய (மாதர்) கண்கள் (அம்புபோல) எய்தலையடைகின்ற, நெய்தொழிலாளர் நெய்தற்கென்றே (பிரத்தியேகமாக) உள்ளஇடத்தில் நெய்தற்றொழில் புரிதலையுறுகின்ற நெல்லை, துன்பத்தை முற்காலத்தும் வருங்காலத்தும் இன்றும் என்றனக்குச் செய்யாரும் இல்லையென்று சொல்லமாட்டாதவரும் இனியதென்றற் காற்றையுடைய அகிலரும் ஆகியவர்வீடு.

என்றற்கு—என்தன்கு—என்றனக்கு என்றற்கு—என்தல்கு—என்றுமெல்லார்க்கு.

**பா-௨௧.** போர் ஆம்பல்—போர்யானை. பூவாய்—அழகியவாய். செந்நீர் ஆம்பல் (நல்லதன்மையுடைய அல்லிப்பூ) இயையுறும் (ஒத்திருக்கும்); செந்நீர் (இரத்தம்) ஆம் பலியை உறும்.

**பா-௨௨.** நின்மலை அங்கு அங்கு அடுக்கும்; நில் (நிற்கின்ற) மலை அங்கம் கடுக்கும்.

முவ்வெயிலும் (மூன்றுகோட்டையும்) உருத்து (கோபித்து) எரிப்பார். மூன்று எயில், மூவெயிலென்பதன்றி முவ்வெயிலெனவும் வழங்கலாமென்பது திருவானைக்காப்புராணம் திருநாட்டுச்சிறப்பு ௩௮-வது பாட்டில் "முவ்வுலகத் தினுமில்லை மொழிதக்க திறத்தினரே" என்பதிற்காண்க. பூதி பயிலும் உருத்தெரிப்பார்—நீறணிந்த திருமேனிக் கோலத்தின் காட்சிதருவார்.

**பா-௨௩.** நேமி (சமுத்திரத்தின்) நாதம்படியா; நேமிநாதம் (என்னும் இலக்கணநூல்) படியா.

வாம .......கோதையர்—இடப்பாகத்துள்ள நிறமுடைய மையணிந்த கண்ணாகிய அரத்தையும், மாலையணிந்த கூந்தலையுமுடைய பார்வதிதேவியையுடையார். கோவை—திருச்சிற்றம்பலக்கோவை.

**பா-௨௪.** நேசிக்க (கேட்போர் பிரியமுறும்படி) பாப்பாடும் (பாட்டுப்பாடும்); நே (அன்பு) சிக்கப் பாப்பு (பாம்பு) ஆடும்.

ஐங்கிருத்தியம் — சிருட்டியாதி பஞ்சகிருத்தியம். கருத்து (மனதின்கண்) இயல்(கின்ற) நடத்தினான் (நடத்தை யுடையவர்).

**பா-௨௫.** தீர்கணவர்—(பொருண்மேற்) பிரிந்த கணவர். ஆலயத்தில்—இத்தலத்துச் சிவாலயத்தில். சேர் (கின்ற) கனவில் (சொப்பனத்தில்) வந்து அழைக்கும். நேர் கனவில்வம் (மிகுந்த வில்வத்தழை) தழைக்கும். கொன்றைமரம் வில்வந்தழைத்தது இத்தலபுராணத்தில் வடபுலத்துக் கவுடன் வந்த சருக்கத்திற் காண்க.

மன் (நிலைத்த) மத (மதநீரையுடைய) நால்வாய் ஆர் மகனார் (நான்றவாயுள்ள மகனையுடையார்). மயற்றுன்பு.....வாயார்—(மோகத்தைத் தனக்குத்தானேசெய்து கொள்வாரோ யன்றித் தானெரித்த) மன்மதனால் மையல்நோய் உண்டாக்கப்படார்.

**பா-௨௬.** தலைபத்தான் படத்தை—இராவணன் உருவெழுதப்பட்டுள்ள படத்தை நோக்கி, பாலர்—சிறுப்பிள்ளைகள், நீ லங்கை ஏந்தல் என்னும்—நீ (உனக்குப் பத்துத்தலை யிருப்பதால் பத்துத்தலையுடையா னென்று சொல்லப்படும்) இலங்கைக் கிறைவன் என்கின்ற நீலம் கை ஏந்தல்—(கொல்லும்) நீலத்தைக் கையில் ஏந்தாதொழிக.

முது வையை ஆற்றினன். மதுவையை (மனத்தை) ஆற்றினன் (செய்தான்).

**பா - ௨௭.** சிற்குரு—ஞானதேசிகன். நிற்குண சைவம் (சிவபிரானை வடிவுமுதலிய குணமுடையவராகத் தியானிக்கும் சகுணோபாசனை செய்து பக்குவமடைந்த சைவன் அக்கடவுளைக் குணங்கடந்த நிர்க்குண மூர்த்தியாக உபாசிக்கும் சைவம்) துறும் (நெருங்கும்).

ஊண் வேண்டாற்கு—ஆகாரத்தில் வெறுப்புற்றவனுக்கு. நிற்கு (உனக்கு) உண் (கின்ற) நசை (இச்சை) வந்து உறும்.

வினையோடு (வினையுடனே) தரித்திரம் தான் (அசை). ஓடு தரித்து இரந்தான்.

திருமுல்லைவாயி லந்தாதி "தோலாநற்கரிய" என்னும் ௨௧ - வது பாட்டில் நிர்க்கரர் நற்கரென்று கூறப்பட்டது போல நிர்க்குண சைவம் நிற்குண சைவமெனப்பட்டது.

**பா - ௨௮.** நேர் (நேர்மை அதாவது நொய்மையுடைய) வைக்கோற் போர் புரியும். கூர்மைவாள் கூர்வாள் என்றாவது போல் நேர்மை வைக்கோல் நேர் வைக்கோலென்றாயது. நேர் (பொருகின்ற) வை (கூரிய) கோல் (அம்புப்) போர்புரியும்.

சார்வுற்ற ஒற்றைக் கலைத்தலையார்—தக்கன் சாபத்தால் ஒருகலை நீங்க மற்றெல்லாக் கலைகளும் இழந்து சரணடைந்த சந்திரனைத் தலையில் வைத்தவர். பற்றைக் கலைத்து அலையார்.

**பா-௨௯.** நெடு உரு பண்ணவர் ஆம்—விட்டுணுக்களே யாகும். நெட்டுருப்பண்ண (பலமுறை படித்துப் பாடம்பண்ண) வாரா (முன்பின் பொருத்த மின்மையால் கருத்தில் தங்கி அமையாத).

தொக்க இரும் தோள் திரண்டார். மிக்கு அவிரும் தோடு இரண்டார்.

**பா - ௩௦.** அழகு பொருந்திய மேகலாபரணத்தைத் தலைக்கெதிர் புல்லிய (அதோதரம் என்னும்) வயிற்றின் கீழ்ப்பகுதி அவ்வாபரணத்தை நீங்காது, வீடுகளில் மிகுந்துள்ள சுத்தமும் பந்துக்களும் உறவாகின்ற (பழகுகின்ற), பந்தாடும் இடத்தில் (ஒன்றோடொன்று) எதிர்த்து நிதமும் பந்துகள் மிகவும் குதிக்கின்ற நெல்லை, ஒரு பச்சைநிறமுள்ள கன்னி சேர்தலை யுடையவரும் கற்ற நிபுணர் வெறுக்காதவராகிக் கனிந்து உணரப்படுதலையுடையவரும் ஆகியவர் இடம்.

**பா - ௩௧.** நீட வம்பு (கச்சு) அடர்ந்திடும். நீள் தவம் படர்ந்திடும்.

கூடற்றெரு (மதுரையின் தெரு) வருத்து (வரும்படி செய்த) வர்த்தகத்தன் (வளையல் வியாபாரி). அருவருத்து உவர்த்த கத்தன்.

**பா - ௩௨.** நீ தா தாவா என்னும்—நீ கொடையாளியா வென்று (இகழ்ந்து) சொல்லும்; நீதா தா வா எனனும்—நீதிமானே கொடுக்க வருவாயாக வென்றுசொல்லும்.

தூதா ஓர் மாது அம் கடை வரலார்—சுந்தரமூர்த்தி நாயனார் தூதராகப் பரவை நாச்சியாரது அழகிய வாயிலிற் சென்றவர்.

பாதங்கள் தைவரலார்—பாதங்களை வருடப் பெற்றவர்.

**பா - ௩௩.** முன்னிலையில்—நேரில். நீல வண்ணன் (விட்டுணு) நேர்வை (ஒப்பாய்).

முன் இலையில் நீ லவணம் நேர்வை—முதலிலே இலையில் நீ உப்பை முறையே படைப்பாயாக. சைவர்கள் பந்தியில் முதலில் உப்புப் படைக்கும் வழக்கம் இங்குக் கூறப்பட்டது.

சாலச்சோகாந்து இமதியாகன் கழல்......வைத்தான்—(காலில் வீழ்ந்தவனைத் தலைமேற் றூக்கிவைத்துக்கொள்ளல் பித்தன் செயல் என்று சொல்வார் சொல்லத்) தக்கன் சாபத்தால் தேய்ந்து ஒரு கலையோடு மிகவும் துன்பப்பட்டு (இமகரனென்னும்) பனியைத் தருவோனாகிய சந்திரன் காலில் விழ (ப்பேரருள் மேலீட்டினால் அச்சந்திரனை) த்தலைமேற் றரித்தவர்.

காந்திமதி ஆகன்—காந்திமதி தேவியாரைத் தேகத்திற் கொண்டவர்.

**பா - ௩௪.** கூர்புலவிக்கோதையர்—மிகுந்த புலவி செய்கின்ற மாதர்

நேர் (கணவர்நேர்) புறங்காட்டுறும் (முதுகுகாட்டும்). நேர் (உவமான மாகிய பிணத்தைப்) புறங்காட்டு உறும் (மயானத்தின் கண் உறும்).

மின் (னுகின்ற) பவள (நிறமுடைய) தாழ் (ந்த) வார் (நீண்ட).

இன்பவளத்து (இன்பமாகிய வளத்திலே அல்லது இன்பந்தருந் திண்ணைத்திலே) ஆழ்வார் (அழுந்துவார்).

**பா - ௩௫.** நிர்மித்துரு (மித்துரு இன்மை) ஆக்கும். நிர்மித்து (நிருமிதஞ் செய்து) உருவாக்கும் (உருவார்க்கும்).

கர்மத்தைத் தேவென்ற மையலார்—முயற்சியே தெய்வமென்ற மயக்கம் பூண்டவர் ஆகிய. முனிவர்—தாருகாவன முனிவர். மதமா (யானையை) வென்று அமையலார்.

**பா - ௩௬.** நீக்கம் (பிரிவு) உன்னி நைந்திடும். நீக்க—நீப்ப—துறக்க, முன் (மற்றறிவினைவுகளை நினைக்கு முன்பு) நினைந்திடும்.

**நீக்கம், நீங்கு** என்னும் தன்வினைப்பகுதி யிடமாகப் பிறந்த தொழிற் பெயர்.

**நீக்க, நீ** என்னும் பகுதியடியாகப் பிறந்த வினையெச்சம்.

**நீ** என்பதினின்றுவந்த **நீக்க, நீங்கு** என்னும் பிறவினைப் பகுதியிற்றோன்றிய **நீக்க** என்பதை வடிவத்தில் ஒத்தாலும் இலக்கணத்தில் வேறுபாடுடைத்து; பொருளினும் சிறிது பேதமுடைத்தென்பது பின்னர்க் கூறப்படும். பிந்திய **நீங்க,** ஓங்குதல் ஓக்குதல ஓக்கம், தூங்குதல் தூக்குதல் தூக்கம் என்றாகும் ஓங்கு தூங்கு என்னும் பகுதிகள் போன்று நீங்குதல் நீக்குதல் நீக்கம் என்றாகும் **நீங்கு** என்னும் பகுதியடியாகப் பிறந்தது. முந்திய **நீக்க,** யாக்க கோக்க பூக்க மூக்க மோக்க சீக்க காக்க என்பவை.யா முதலிய ஓரெழுத்துப் பகுதிகளினின்று தோன்றியவை போல, **நீ** என்னும் பகுதியினின்று பிறந்தது. யாக்க கோக்க முதலானவை யாப்ப கோப்ப ஆதியாக வருதல்போல **நீக்க**வும் நீப்ப வென்று வரும்.

**நீத்தல்** (வேறுபதங்களோடு சேராமலே) தனிநின்று துறவினை யுணர்த்தும். **நீக்கலோ,** பற்றினை நீக்கல் என்பது போல வேறு தக்க பதம் புணர்ந்தவழி மாத்திரம் துறவினையுணர்த்தும்.

இப்பாட்டில் **நீக்கம் நீக்க** என்பவை சிலேடைக் குதவா என்று சிலர் வாதித்தமையின் இவ்வளவு விரித்துக்கூறல் ஆவசியக மாயிற்று.

**பா - ௩௭.** ஊடா - ஊடி. நீடா (த) சனம் கடுக்கும்; நீள் தாக்கணங்கு அடுக்கும். கரு நைத்து உறையார்.

**பா - ௩௮.** கன்றுகளுக்கு இடையர் நேர் (செவ்வையான) நிரையின் (பசுக்கூட்டத்தின்) பால் ஊட்டும் (பாலை உண்பிக்கும்).

செய்யுட்குப் பாவாணர் நேர்நிரை (நேர்நிரை என்னும் அசைகளை) இன்பால் இனிதாக) ஊட்டும் (சேர்க்கும்)

பார் நிரம்ப உந்து ஆனந்தந் தவ (மிக) தான் (அசை) ஒன்ற (பொருந்திய) தலச்சீர் (இந்த நெல்லை மான்மியத்தை) கேள் (கேட்ட) கணற்கு (கண்ணனுக்கு) சந்தானம் தந்த அத்தான் (அத்தான் என்னும் முறையுடையார்). இத்தலபுராணத்தில் தலமகிமை கேட்ட கண்ணனுக்குப் புத்திரப்பேறுதவிய சருக்கத்தைப் பார்க்க.

**பா - ௩௯.** நீத்து (துறந்து) வல் (கடினமான) ஆர்வம் (ஆசைகளைத்) தடுக்கும்; நீத்து (நீந்துதல்) வல்லார் (வல்லோர்) வந்து அடுக்கும்.

கூத்தன்—நடேசர். பொருமி.........தறுகணன்சேர்வு—(முப்புரத்தாரால் வருந்தம் அடைந்து) பொருமலுற்றுக் கதறும் (கண்ணனாகிய) திருமால்போற்ற (அந்தப்) புரங்களையழித்த, சண்டையில் மிகுந்த அஞ்சாமையுடையார் சேருமிடம்.

**பா - ௪0.** தங்கிய கட்குடியர், கொடுக்கப்படும் பழமையானகள்ளை விரும்புகின்ற, தோப்புவைப்போர் செவ்வையாகப் பழங்களை (முளைக்கும்படி) கமுதலைச் செய்கின்ற, துறவிகள் நேரிடுந் துன்பத்தைக் கெடுக்கின்ற நெல்லை, ஞானைக் கொன்றோனுடைய தாய்க்கு அங்கு அன்புடையவரும் (முப்புரத்தாருடைய) பெரிய கோட்டைகளை நாசமாக்கியவரும் பெண் உருவத்தையுடைய கங்காதரரும் ஆகியவர் வாழும் இடம். பிழி - தேன்.

**பா - ௪௧.** தூ ஆச்சிரமத்துத் தூதுணம்—முனிவாது ஆச்சிரமத்திலுள்ள தூதுணம் புறாக்கள்; நீவாரம் மேய்தரும் - நீவாரமென்னும் நெல்லை மேயும். நீவு (நீக்கிக்கழித்த) ஆரம் ஏய்தரும் (பொருந்தும்).

ஊர்தி.....ஒண்ணுவார் — வாகனமாகிய அன்னத்தை யுடையாராகும் தமது மனைவி தங்கிய ஒள்ளிய நாவினராகிய பிரமதேவர். ஆதி மத்தியம் அந்தம் இல்லார்.

காஞ்சிப்புராணம் கழுவாய்ப்படலம் கூ-வது பாட்டில் "கோதை பாதி மெய்யணிந்த கோலமுற்ற நீவினன்" என்பதில் நீவுதல் களைதற்பொருளில் வந்ததுகாண்க.

**பா - ௪௨.** மனவர்—மன்னவர். நிச்சல (சலனமில்லாத) தியானம்; நிச்சல் (தினமும்) அத்தி (யானை) யானம் (சிவிகை).

கச்சி முகில் - கச்சியில்வாழும் (கொடையினல்) மேகம்போன்றவர். ஆண்டு - அக்கச்சியில், அம் மாண் தவத் தன் மொய்குழல்—(செய்த) அந்த மாட்சிதங்கிய தவத்தையுடைய தமக்குரிய நெருங்கிய கூந்தலை யுடையாராகிய உமாதேவியார். அகில (எல்லா) அண்டம் ஆண்ட அத்தன்.

**பா - ௪௩.** நேரிழையார்க் கடுக்கும்—மாதர்களை ஒக்கும்.

நேர் இழையார்க்கு அடுக்கும் - ஒழுங்கானவற்றைச் செய்யார்க்குப் பொருந்தும்.

கால் மாறிய பண்பு ஆடினன் - கால்மாறிய பண்பே ஆடினன். தேன் ஊறிய பண் பாடினன்.

**பா - ௪௪.** நெய்த்து, ஓர் ஆறு ஐ ஏய் - ஒப்பற்ற நீங்காத மேகம் நிகர்; நெய்த்தோர் ஆல் நாமை ஏய் — (மேலேபடிந்துள்ள) இரத்தத்தால் (காண்போருக்கு) அச்சத்தைப் பொருத்தும்.

பைத்து ஆர்—படம்விரித்துத் (தம்மெய்யில் அணியாகத்) தங்கிய திரு (அழகிய) பாப்பு (பாம்பு) அரசினர். சேரார் (பகைவரைத்) தெற்கன்றி (நமன்திசையன்றி மற்றத் திசையில்) திருப்பா (திருப்பாத) பரசினர் (மழுப்படையார்).

**பா - சரு.** சோபத்தால் - காமத்தினால் உண்டாகிய சோர்வினால், தூர்த்தையர் - பரகீயா நாயகிகள், தம் சோரனை - தத்தம் சோர புருடனை, நீ பத்தா (கணவன்) கத்தா (கடவுள்), என் (னும்).

யாரும்—எல்லாரும்; நீபத்து (கடப்பமாலையுடைய) ஆகத்தா - மார்பத்தை யுடையானே, என் (கின்ற).

பல்வித நோன்பு உள் நைதருவார் - பலவித விரதங்களால் (உடம்பு) நைபவர்கள். வெம்பவம்—கொடிய பாவம் (ஆகிய சமுத்திரத்தை), நீந்த—நீந்தும்படி, தம்பத நோன்புணை - தம்முடைய பதமாகிய வலிய தெப்பத்தை, தருவார்.

பாட்டில் நீந்தந்தன் என்பதை நீந்தத்தம் என்று திருத்திக் கொள்க.

**பா - சசா.** நெய் (யைக்) குழல்வாய் (கூந்தலினிடத்து)ப் பெய்திடும். நெய் குழல் (நெய்வதற் குபயோகமாகிய குழலினுடைய) வாய்ப்பு எய்திடும்.

மாதர்—தாருகாவன முனிவர் பன்னியர், வாயில் முத்த (தங்கள்வாயில்முத்தமிட), வணங்கு - பிரார்த்தித்து வணக்கஞ் செய்யப்பட்ட; கோவில்வேயின் முத்தமானர்—சிவாலயத்துள்ள மூங்கிலின் (உண்டானமையால் அதன்) முத்தம் ஆனவர்.

**பா - சஎ.** துன்னும் (சரசஞ்செய்ய நெருங்கும்) அன்பற்காதலி (காதலனைக் காதலியானவள்) நின்னில் (உன்னினும்) விடன் (காமுகன்) இல் (இல்லை). சோரன்-(தப்ப ஓடுகின்ற) திருடனை, தொடர்வான்—தொடர்பவன், நில் நில் - நிற்பாயாக நிற்பாயாக, விடன்—(நான் உன்னைத்தப்ப) விடேன்.

கோலியிட்டு - வளைந்து, அவித்த - அழித்த, கத்தன்.

கம்பராமாயணத்தில் மாரீசன் வதைப்படலத்தில் "வற்கலைய" வென்னும் பாட்டில் உனக்கு அலையார்கள் என்று பொருள்படும் "உற்கலையர்" போலவும் சிவஞானயோகிகள் கம்பரந்தாதியில் "வையம் பணிசிலை" என்னும்பாட்டில் வைக்கமாட்டேம் என்று பொருள்படும் "வையம்" போலவும், விடன் விடேன் எனப் பொருள்பட்டது.

**பா - சஅ.** ஏர் கார் ஐம்பால் - அழகிய கரிய கூந்தல். படிவு ஆர் (தங்கிய) நீர் (தன்மையுடைய) கார்மணல் (கருமணலை) கடுக்கும்

(ஒத்திருக்கும்); அஃது ஏய்சோலை - அக்கூந்தலை யொத்த சோலையை, படிவார் - பூமிமீது சொரிகின்ற, நீர்க்கார் - நீருடைய மேகம், மண்ணற்கு அடுக்கும் - அலங்கரித்தற்கு அடுத்ததுபோல அடுக்கும்.

சூர்க்காதும் (சூரனைக்கொன்ற) செவ்வேள் (சுப்பிரமணியர்) நுவல் நந்தன் (விட்டுணு).

**பா - சஈ.** அறிஞர் வேர்தை நீதம் கையாய் என்னும்—அறிஞராயுள்ளோர் அரசனைநோக்கி நீதியை வெறுத்தல் செய்யா திருப்பாயாக என்று சொல்லுகிற. அறிஞர் மின்முருள் மனைவி அல்லாளை நீ தங்கை ஆய் (தாய்) என்னும்.

போதத்து அவிர் உத்தம நித்தன் ஆங்கு (மதுரையில்) இளைஞன் சேய் ஆம் அவ் விருத்த மனித்தன் (விருத்த குமார பாலரான மானுட உருக் கொண்டவர்).

**பா - ருo.** சிவந்து (கோபித்து) தையல் நேர் அங்கு அஞ்சு அம்பு ஊக்கும்.

சிவம் (சிவத்தை) துதைய (நெருங்கும்படி) நேர் (உதவுகின்ற) அங்கம் (வேதாங்கம்) சம் (இன்பத்தைப்) பூக்கும் (உண்டாக்கும்).

வாவி (தடாகத்தில்) சிவந்து (சிவந்த நிறங்கொண்டு) உதயநேரம் (சூரியோதய காலத்தில்) கஞ்சம் (தாமரை) பூக்கும் (மலரும்).

வார் அள்ளில்—நீண்டகாதில்; செய் அகலாத நத்தன் - வயல் களினின்றும் நீங்காத (சுபாவத்தையுடைய) சங்கு (குழை) உடையவர்.

செய்ய கல் ஆதனத்தன்—சிவந்த நிறமுடைய (மேரு) மலையை இருப்பிடமாக வுடையவர்.

செய்ய கலாதனத்தன்—செம்மையாகிய கலைகளாகிய தனத்தை யுடையார்.

பூததல், பிறவினையாதற்கு நியாயம் பாரதத்தில் முதற்செய்யுளில் "பூக்கு மாமுத லெவனவன் பொன்னடி போற்றி" என்புழிக் காண்க.

**பா - ருக.** நீர்க்கொண்டு, அல்லலை உறும் — ஜலதோஷம் கொண்டு துன்பத்தை அடையும்; தண்டலை — சோலையில், நீர்க் கொண்டல் அலையுறும் - நீருண்டமேகம் அலையும்.

நல் நவ ரத தான நயக்கவி சொற்றூர்—நல்ல நவரசங்களுக்கு இருப்பிடமாகவுள்ள நயமான ("கொங்கு தேர்" முதலிய) பாட்டுக் களைப்பாடினூர். அனவரத தானர் (என்னும் திருநாமத்தையுடையவர்).

**பா - ருஉ.** ஈருருத்தமா (இரண்டருத்தமாக) மயல்கொள் ஏழை (மோகமுற்றநாயகி) அவன்மேவ (அவமாக - பயனின்றி) நேர் (தெய்வத்துக்கு நேர்ந்த) ஒரு (ஆட்டை) படுக்கிர் (கொல்லாநிர்கள் என்றும்), அவன் (யான் காதலுற்ற நாயகன்) மேவ (பொருந்தும்படி) சேர் (நேராக) ஒருப்படுக்கிர் (இசையச் செய்கின்றீர்களில்லையே என்றும்) என் (சொல்கின்ற) நெல்லையே.

மேரு இவர் புடை வையம் களிப்பான் மால் போல் ஏழையர்க்கு கவர் புடைவை அங்கு அளிப்பான்—மலாமேரு பர்வதம் (தன்னிடத்தே) எழுந்து மேற்கொண்டிருக்கத்தக்க (விசாலமான) இடத்தையுடைய பூமியின்கண் வாழ்வோர் களிப்படையும்படி, கண்ணன் (கோவியரது ஆடையைக் கவர்ந்து திரும்பக்கொடுத்தது) போல, (தாமும்) மாதருக்கு (த்தாம்) கவர்ந்த (அவர்களுடைய ஆடையைத் திரும்பக்) கொடுத்தவர். இக்கதை இத் தலபுராணத்துக் கூறப்பட்டுள்ளது. வையம், வையத்து வாழ்வோரைக் குறித்தது.

**பா - ருங.** (தாகத்துக்குச்) சலங்கொடுப்பாயாக வென்றும் வாயின்கணுள்ள அமுதந் தருவாயாக வென்றும் சிலேடைப்படக் கூறுங்கணவனை நோக்கி மனையாள் (தாகத்திலும்) தண்ணீர் விருப்பமுடையீரென்றும் நீர் மன்மதனுக்கும் அழகு அதிகமாக உடையீரென்றும் இருபொருள்பட நீர் வேட்கை (வேட் * கு ஐ) மிக்கீரென்று சொல்லுகின்ற நெல்லையே, அழகுவாய்ந்த வடிவு சிவப்புப் பொருந்தியவரும் (எதிர்த்துப்) பொருதோரைப் பேய்க்கு உணவாக (யாரும்) பயமடையும்படி கொன்று கொடுத்தவருமாகியவர் விரும்பும் இடம்.

உரு அரக்கு (சிவப்பு) ஒன்றிட்டார் (ஒன்றிடுதலை அதாவது பொருந்துதலைச் செய்தார்); வெருவர (பயப்பட) கொன்று இட்டார் (கொடுத்தார்).

**பா - ருச.** நீண்டகூந்தலையுடைய மாதர் கண்ணமானது உவமானத்தில் தனக்குச் சமமாகக் கண்ணுடியையுறும்; ஸ்தானத்தில் கண்ணுக்கு அடியாகவுறும்.

கர்மத்திகைக்கையார் — காமத்தினது திகைப்பினையுடையார். மதுரையில் வேதங்களைக் குதிரையாக்கி அதன்மேலாய் மத்திகையென்னும் குதிரைச்சம்மட்டி கொண்டவர்.

**பா - ருரு.** நித்தன் நித்தனஞ் செய்துறும். நித்தல் நித்தல் கஞ்சு எய்துறும்.

---

* இக் கு, பிரயோகவிவேகம் கரு-ம் பாட்டுரையில் 'சாத்தற்கு நெடியன்' என்பதன் குப் போல, ஐந்தன் உருபுப்பொருள் தந்தது.

வித்தியாசம் பன்னல் (சொல்லுதல்) மேவாது (அமையாது) என நின்றான்.

**பா - ருசு.** வாள்வீரர் கார்க்கலவைமார்பு — (கஸ்தூரி மிகக்கலந்த) கறுப்புக்கலவை பூசியமார்பு, உள் (ளே) நேர் (உண்டாகும்) நீள் (மிகுந்த) ஆசு (குற்றம்) அலமருஉம் (தரிக்கமாட்டாதுவருந்தும்), மேல் (வெளிப்புறம்) நேர் (ஒப்பாக) நீளாசலம் (நீலமலை) மருஉம் (மருவும்).

நீளாசலம்:—"நீல" "அசலம்" என்ற பதங்கள் வடமொழிச்சந்திப்படி "நீலாசலம்" ஆகி அப்பாஷையில் லகர ளகர பேதமின்மை பற்றி "நீளாசலம்" ஆயின.

கேளார் (பகைவரது) சமூகம் (கூட்டத்தை) ஒழிப்பித்த நத்தன். ஏக மொழி (ஒருசொல் அதாவது மாறாத சத்தியவாக்குடைய) பித்தன் அத்தன்.

**பா - ருஎ.** நீறு (விபூதி) பட்டு உடை (வஸ்திரம்). நீறுபட்டு உடை (தலை) யுறும்.

(காளியோடு) வீறு நடம் ஆண்ட வள் அரங்கன் (தாம்பிரசபையுடையார்); வேண்ட வளர் அங்கன் (இலிங்கமாகிய அங்கத்தையுடையவர்).

இத் தலபுராணத்தில் இக்கதைகள் கூறப்பட்டுள்ளன.

**பா - ருஅ.** தேர் இவரும்—தேரேறும். வீரர்களின்தெவ்வர்—வீரர்களின்பகைவர், நேரில் நில்லாத் தோற்றிடும்—நேரில் நிற்கமாட்டாமல் தோற்றுவிடும். நேரில்—ஒப்பற்ற, நிலா—சந்திரிகை, தோற்றிடும் — தோன்றும்படிசெய்யும்.

வாரியொடு விந்தம் அடக்கு அங்கையார்—கும்பமுனி. சந்த (அழகிய) மட (இளமையுடைய) கங்கையார்.

**பா - ருகூ.** பார் ஏத்து இல்லம் கொல்லைப்பால் நீராவி என்றும் உறும்—பூவுலகோர்புகழும் (அழகுவாய்ந்த) வீடுகள் பின்பக்கத்துள்ள தோட்டங்களில் தடாகத்தை எக்காலத்தும் உறும். மடவார் நாயகர்பால் நீர் ஆவி என்றும்உறும் — மாதர்தங்கள் புருடரிடத்தில் (வேறுவகையாக விதந்துகூறி உரிமை பாராட்டலன்றி) நீர்உயிர்போல்வீர் என்று சொல்லியும் அடையும்.

ஆலவாய்க்கூடலார் — மதுரையுடையார். அவ்வணிகமாதரார்—மதுரைச் செட்டிப்பெண்கள்மேல் அவாய் (அவாவிக்) கூடலார் (சேராதவர்).

**பா - ௯0.** வாடை அமர் ஆடி நீட முதுகாற்று உறும்—தெருக்கள், அமர்ந்த ஆடிமாதம் மிகவும், பெருங்காற்றடிக்கப்படும்.

கொய்வாழை அம் மராடி நீடு அமுது காற்றுறும் — (தண்டி ணிமித்தம்) அரியப்பட்டவாழைகள் அந்த மரங்களின் (அரியுண்ட) அடியை நெடும்பொழுது சலத்தைக் காலச்செய்யும்.

[**மரஅடி, மராடி** என ஆன்றோர் ஆட்சிபற்றிக் கூறப்பட்டது.]

பார்மகளார் அமர்ஆடி நீள் தம் முதுகு ஆற்றுறும்—பூமிதேவி யார் சண்டைசெய்யப்பட்டு முதுகு ஆற்றுதல் உறும்.

கூடல் இடை அரையர் ஆனோர்—மதுரையின்கண் அரசராய்நீங்காதவர்; இடையர் ஐயர் ஆனோர் இடையர் ஐயர் ஆனோர்—கோபாலனான விட்டுணு, வேதியனான பிரமன் (ஆகிய இருவருடைய) மத்தியில் வீற்றிருப்பவர் (அவ்விருவருக்கும் மற்றெல்லாருக்கும்) பிதா, இடப வாகனத்தை யுடையவர்.

திருவிளையாடற் புராணம் திருமணப்படலத்தில் கசுசு - வது பாட்டில் "வலத்தயன்வரவுகானுள் மாலிடங்காணுள்" எனவருவது நோக்குக.

**பா - ௯௧.** நீதி கைப்பற்றுறுக — நீதியைக்கைப்பற்றிடுக. நீ திகைப்பு அற்று உறுக.

ஓதி (உபதேசித்து)க் கரிக்குருவி கற்பித்தார் (கற்பச்செய்தார்). கார்நிற காற்கோட்டுக் கரிக்கு உரு விகற்பித்தார்—(துருவாசமுனிவரர் சாபத்தால்) கரியநிறமடைந்த நான்குகோட்டையுடைய (அயிராவதம் என்னும்) யானைக்குக் (கரிய) உருவம் (வெண்மையாக) மாறும்படி செய்தார்.

**பா - ௯௨.** ஆரமுலையால் இடை மிக எங்கோமும் நையுற்றிடத் தாழ்—ஆரமணிந்த தன (பார) த்தால் இடை மிகவும் எங்கேரமும் நையும்படி தாழுகின்ற.

இல்லாள் புலப்பால் சேள் மிக வெங்கோர முன்னை உற்றிடத் தாழ் — மனையாள் புலவியால் மிகவும் முதுகினைக்காட்ட முன்பக்கத்தை அடையும்படி கணவன் வணங்குகின்ற.

நீரொடு புல்லைக் கல்லினாலாய இடபத்துக்கு ஊட்டினர். இத் தலபுராணத்தில் வடபுலத்துக் கெவுடன்வந்த சருக்கத்தைப்பார்க்க. காற்கண்—திருவடியில்.

**பா - ௯௩.** நேரியல் கைப்பு (துன்பத்தை) ஒருவும் (நீக்கும்). சீவகசிந்தாமணி சுரமஞ்சரியாரிலம்பகம் "தாசியர்" என்னும் பாட்டிலும், முத்தியிலம்பகம் "காடியாட்டி" என்னும் பாட்டிலும், மண்மக

ளிலம்பகம் "கூற்றெனவேழம்" என்னும் பாட்டிலும்முறையே பேது றுக்காது, வாயுறுத்து, வீழ்க்கா (அதாவதுவீழ்த்து)என்னும் பிறவினைப் பொருள்களில் பேதுறுத், வாயுறீஇ, வீழா என்பவை வழங்கப் பட்டிருத்தல்போல, ஈண்டு ஒருவு என்னும் தன்வினை ஒருவுவிக்கும் என்னும் பிறவினைப்பொருளை உணர்த்திற்று. திருவானைக்காப்புரா ணம் நாட்டுப்படலம் "பருவநோக்கி" என்னும் பாட்டில் "கலையெலா மொருவுசெவ்வி" என்பதில் ஒருவு ஒருவுவிஎன்னும் பொருளில் வரு வதுங்காண்க. மதுரைக்காஞ்சி சகூ௮-வது அடியில் 'பழியைநீக்கி' என்னும் பொருளுடைய 'பழி ஒரீஇ' என்பதையும் பார்க்க.

நொய்மை அல்லது மென்மை யென்னும் பொருளுடைய **நேர்மை**, **இயல்** என்னும் பதத்தோடு புணர்ந்து, **நேரியல்** என்றாகி (மென்மை இயல் என்னும் பதங்கள் புணர்ந்தாய) மெல்லியல் போலப் பெண்ணை யுணர்த்திற்று.

மாதுரியங்கள் தந்து ஆர் (கின்ற). மா துரியம் (என்னும் அவத் தையைக்) கடந்தார்.

**பா - கூச.** நேய மனம் (சிநேககுணமுடையமனம்) அடுக்கும். நேயம் (நெய்) அன்னம் மடுக்கும்.

காய்விற் செருவுள் அம்பு அற்றார் சிவண அன்பு அற்றார்க்கு— விற்போரில் அம்பில்லாதா ரொப்ப (காமக்குரோதாதிபகைவருடன் பொரும்போரில்) அன்பு இல்லார்க்கு, திருவுள்ளம் பற்றார் - அருளார். செறிவு—நெருங்கியிருக்கும் இடம்.

**பா - கூரு.** அளவாநின்ற — (அன்பொடு) கலவாநின்ற, விருந் தோடு உவந்து ஆர் (புசிக்கின்ற). அளவா நின்று — (காதுக்கு) அள வாக நின்று அவிரும் தோடு வந்து ஆர் (தங்குகின்ற).

புரி வார் சடையார் — கட்டப்பெற்ற நீண்ட சடையுடையார். புரிவார்க்கு — விரும்புவோர்க்கு, இன்பு என்றும் புரிவார், சடையார் (இன்புபுரியச் சடைக்காதவர்).

**பா - கூகூ.** நீர் நசை தோற்ற நீரில் புல்வாய்க்கு அவியா—தண் ணீர் விருப்பமாகிய தாகம் கண்ணுக்கு நீராகத் தோற்றுகிற கானற் சலத்தால் தணியாத.

தெவ்வர் உயிர் நீங்காமை தோற்ற நீரில் புல் வாய்க் கவ்வி ஆம்—பகைவரது உயிர் நீங்காமையானது அவர்கள் தோல்வியடைந்த தன்மையிலே புல்லை வாயினிடத்துக் கௌவி ஆகும்.

பொருப்புக் கொடிச்சியார்—மலையில் வாழ்ந்த வேட்டுவ மாதாகிய வள்ளி நாயகியை யுடையார். விருப்புக் கொடு இச்சியார்—விருப்பை (அங்கீகரித்துக்) கொண்டு (அவர்களை) விரும்பார்.

**பா - ௬௭.** தேர் ஆசான்—தேர்ந்த உவாத்தியார். அவன்கல்—அச்சூரியன் கல்லாகிய சூரிய காந்தக்கல். நேராத (பொருந்தாத) வம்பு ஒழியும். நேர் (மிகுந்த) ஆதவம் (வெயிலைப்) பொழியும்.

நார் ஆர் பசு ஏதம் நைத்து உறுவார். (தம்திருவடிக்கு) அன்பு நிறைந்த ஆன்மாக்களின் குற்றத்தைத் தொலைத்து (அவ்வான்மாக்களிடத்துப்) பொருந்துவார். கோவிற்கண் பசு வே தனைத் துறுவார்—இத்தலத்துச் சிவாலயத்தின்கணுள்ள பசிய மூங்கிலைச் சேர்ந்திருப்பார். துறு - நெருங்கு.

**பா - ௬௮.** தீபம் நெய் வார்த்து எரிக்கப்படும். (நெய்யும்) தறியுடைமை நெய்வானைத் தெரியும்படி செய்யும்.

நீதிநெறி கல்லா (த) சாக்கிய நாயனார். கோதின் எறி கல்லான்.

**பா - ௬௯.** நேர் இசைவு (சம்மதத்தை) எண் (ணுகின்ற) பாவை (மாது) துறும் (மனைவியாகப் பொருந்தும்).

இந்நூற்கு (இந்த நெல்லைவெண்பாவுக்கு) நேரிசைவெண்பா ஐது (அழகிதாக) உறும் (பொருந்தும்.)

ஏர் இசை வெள் அன்னம் சுனைத்தலை (தடாகத்தினிடத்து) ஆர். அல் (இருண்ட) நஞ்சு நைத்து அலையார் (அலைக்கப்படார்).

**பா - ௭௦.** நாரியர் கஞ்சம் நேரக் கழல் கை உறும்—மாதர்கள் தாமரைமலரை நிகரக் காலும் கையும் பொருந்தும்.

யாசகர் கஞ்சன் நேர் அக்கு அழல்கை உறும் — இரப்போர் உலோபியின் எதிரில் (அவன் கொடாமையால் கோபங்கொண்டு) கண் அழலுதலைப் பொருந்தும்.

நாமகள் கச்சு கஞ்சன் நேரக் கழல்கை உறும்—சரசுவதியின் கச்சு பிரமன் எதிர்ப்பட (அவள் தேகம் பூரித்தலால் அக்கச்சின் பூட்டு விட்டு) நெகிழ்தலை யுறும்.

நாரணன் கண் அப்பு அனகன் ஆரியன்—விட்டுணு கண்ணை (த்தாமரைமலராக)ச் சாத்தப்பெற்ற கடவுள், பூசித்தற்குரியர். அப்பன் நக நாரியன்—பிதா, மலைமகளாகிய பார்வதியையுடையார். அப் ப (ன்) னக் நாரியன்—அந்தப் பாம்பு நாணியையுடையார்.

**பா - ௭௧.** நென்னல் பழம் நத்தா—நேற்றைக்கனியை விரும்பா—அன்றுபழுத்த பழத்தை விரும்பும்.

கூர் விளைவு—மிகு விளைவு, நெல் நல் பழனத்து ஆம்—நெற்பயிரிடும் நல்ல வயலின்கண் உண்டாம்.

முன் ஓர் பெரு வருத்தப்பாட்டினன் பேண—முன் ஒரு பெரிய வருத்தப்பாட்டையுடையானாகிய தருமி விரும்ப, சொல் (லிய), கொங்கென்—"கொங்குதேர்" என்ற, திரு அருத்தப்பாட்டினன்—அழகிய பொருளையுடைய பாட்டினர். பாட்டைச்சொன்னன் எனற்பாலது சொல்பாட்டினன் எனப்பட்டது. அஉ-வது பாட்டுரையைப் பார்க்க.

**பா - எஉ.** போரில் புறங்கொடுப்பாரைக் குமரர் நீரில் நுரை நேர்விர் எனும். யுத்தத்திலே (தோற்று) முதுகு கொடுக்கும் பகைவரை நோக்கிக் குமரராயுள்ளோர் நீரிலே நுரை கேவலமானது போல மக்களுள் இழிந்தீர்களென்று சொல்லும்.

அணையிற் புறங்கொடுப்பாரைக் குமரர் நீர் இன் உரை நேர்விர் எனும்—அணையிலே (புலவியால்) முதுகுகாட்டும் நாயகிகளைக் காளையர்கள் நீங்கள் இனியமொழியருள்வீர்களாக என்று சொல்லும்.

பாரி மூலை மா வடுவைத் தகத் தன் மார்பின் வைத்தான்—தேவியாரது தனங்களாலாய பெரியதழும்பைத் தகுதியாகத் தமது மார்பின் வைத்தவர். வன்னியின் முன் மா வடு வைத்த கத்தன்—இத்தலத்துச் சிவாலயத்தின் கண் உள்ள வன்னிமரத்தில் மாம்பிஞ்சு உண்டாகும்படி செய்தவர். இத் தலபுராணத்தில் வடபுலத்துக்கெவுடன் வந்த சருக்கத்தைப் பார்க்க.

**பா - எ௩.** படியாதவனும் கற்பிழந்தவளும் சிரிக்கக்கண்டவர்கள். நிற்கு ஆம் உறுவல்—உனக்குத்துன்பம் (படியாமையால்) உண்டாகும். நிற்கா முறுவல்—சிரிப்பு நிலையாது (கற்பிழந்தமையால் துன்பம் வரும்).

தெற்கு ஆர் (இத்தலத்துக்குத் தெற்காகவுள்ள) குணக்கு (கிழக்குநோக்கி) ஓடும் (பொருநை) ஆற்றினன். தி(ண்)ணக் கோடு (வலிய கொம்பு) மாற்றினன்.

**பா - எ௪.** நேர் புதனை உங்கு ஒடுக்கும். நேர்பு (சம்மதித்து) (உடல் பொருளோடு) தன்னையும் கொடுக்கும்.

சோர்பின்றி—தளர்தலின்றி. வாகாய் அகங்கையின் ஆர் வன்னி (நெருப்பு) உடையார், சடை (யின்கண்) ஆர் ஆகாய கங்கையினர்.

**பா - எ௫.** வேட்டு அயின் உண்டார் மிக்க (தாகிய) விரும்பு அணைமேல் நீட்டித்து (நெடுநேரமாக) உறக்கம் முற்றும் (முதிரும்).

சோலை மிக்க இரும் (பெரிய) பணை (மரக் கொம்பை) மேல் (மேலே) நீட்டித் துறக்கம் (சுவர்க்கலோகத்தை) முற்றும் (அடையும்). முற்றுதல் அடைதற் பொருளில்வருவது காஞ்சிப்புராணத்தில் பன்னிருநாமப்படலத்தில் ௧௧௧-வது பாட்டில் "முழங்குறு காஞ்சிமா நகர முற்றினோர்" என்பதிற்காண்க.

ஊட்டி வளர்த்து ஊன் (தசை) துறு (நிறைந்த) கோலம் (உடலைக்) காவார் (ஆகி) ஒண்பதமே (தமது ஒள்ளியபாதத்தையே) போற்றிடுவார்க்கு ஊன்றுறு (ஊன்றுகின்ற) கோல் அங்கு ஆவார்.

**பா - எ௬.** நீற்றில் (விபூதியினால்) சுவர்க்கம் நல்கும். நீற்றில் (சுண்ணாம்பினால்) சுவர்க்கு (சுவருக்கு) அம் (அழகு) நல்கும்.

கண் நித்திரை மயக்கம் முற்றார் (முதிராதவர்) (யோகத்தில்) காண்பவர். மணித் திரை மயக் கம் (மயமாகிய சலம்) உற்றார்.

**பா - எஎ.** ஐது அமரும் வாச்சியசாலையில்—அழகிதாயமர்ந்த வாச்சியசாலையில், நெய்தல் நிலத்து யாழ் உறும்—(மற்றவாச்சியங்களுடன்) நெய்தனிலத்து யாழும் உறும்.

அன்னசத்திரத்தில் நெய்தன்னில் (நெய்யில்) அத்தி (யானை) ஆழுறும் (முழுகும்). நெய் மிகுந்திருக்கும் என்றபடி.

கைதங்கி வீண் ஆகா நத்தன் — (விட்டுணுவாகிய தம்முடைய) கையிற் றரிக்கப்பெற்றமையால் வீணாகாது பயன்பட்ட (பஞ்சசனன் என்பாகிய) பாஞ்சசன்னியத்தை யுடையவர். பாஞ்சசன்னியத்தின் வரலாறு காஞ்சிப்புராணத்தில் மச்சேசப்படலத்தில் "சங்க நேருருப் பஞ்ச சனப்பெயர் — வெங்க ணானையு மாயிடை வீட்டியே — துங்க வோசை வலம்புரித் தோற்றமா—மங்கவன்ற னெலும்பை யணிந்தனன்" என்னும் பாட்டிற் காண்க.

கூடலிற் செய் வீணைகானத்தன் — மதுரையில் (பாணபத்தர்க்கடிமையாய்) வீணைகானஞ் செய்தவர்.

**பா - எ௮.** வீரருக்குப் போரில் சேரார் செவ்வாய் நேர முது கிட்டிடும்—வீரர்களுக்கு யுத்தத்திலே பகைவராயுள்ளோர் நன்றாக (அவ்வீரர்கள்) போர்செய்யவே (தோற்றுப்) புறங்காட்டியோடும்.

வீரருக்கு அணைமேல் (பாயல்மேலே) சேரார் (முன்ஊடிச் சேராதிருந்தமாதர்) செவ்வாய் (சிவந்தவாய்) நேர்அமுது (கொடுக்கும் அதராமிர்தம்) கிட்டிடும் (கிடைக்கும்).

பாரி திருக்கண் புதைத்த மெய்யன்—தேவியாரால் (முன்) அழகிய கண்கள் புதைக்கப்பட்ட மெய்ப்பொருளானவர்.

முனிமின்னார் திருக்கு அன்பு தைத்த மெய்யன்—தாருகாவன முனிவரது பன்னியர்கண்கள் நெருங்கித் தைக்கப்பட்ட திருமேனி யுடையார். அன்பு—செய்புஎன்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

**பா-எகூ.** நன்தகை ஆண்நண்டு அரும் பேட்டு ஞெண்டு உடம் படுத்து அணையும்—சேரும் விருப்பம் பொருந்திய ஆண்நண்டு அரிய பெடைநண்டை இசையச்செய்து சேரும்.

பூநாகம் அரும்பு ஏட்டு ஞெண்டு உடம்பு அடுத்து அணையும்—பூவில் வாசஞ்செய்யும் நாகம் பூவரும்புகளின் இதழ்களில் கிளைக்குந் தன்மையுடைய உடம்பைப் பொருந்திச்சேரும். ஞெண்டல்கிளைத்தற் பொருட்டென்பது நிகண்டில் கூ-வது தொகுதியிற் "கீறலே" என்னும் கவியிற்காண்க.

(இரண்டு கண் உடைய) தொண்டர்க்கு (ஆக அவர்கள் காணும் படி) இனிது அவநி (பூமியின்கண்) வந்தவர். எண் கண்ணன் (எட்டுக் கண் உள்ள பிரமன்) காணுமே (காணுமல்) நனி தவ (மிகவும் அதிக மாக) சிவந்தவர் (உயர்ந்தவர்).

**பா - அ0.** நாரியர் கவான் மாலை நேர் அம் பிடிக்கை உறும்—மாதர் தொடையின் ஒழுங்கான உவமானமாக அழகிய பெட்டையா னைத் துதிக்கை உறும்.

நாரியர் நகில் மாலை நேரம் பிடிக்கை உறும்—மாதரது தனம் அந் திநேரத்தில் (நாயகரால்) பிடிக்கப்படுதலை யுறும்.

நாரியர் நெஞ்சம் மாலை நேர் அம்பு இடிக்கை உறும்—மாதரது மனம் காமத்தைத்தருகின்ற (மன்மதனுடைய பூ) அம்பினுல் தாக்கப் படுதலை யுறும்.

ஆரணத்தின் அந்த ரங்கத்து ஆனனத்தன் — வேதங்களினது அழகிய நடனசாலை (யாகியநாவினை) யுடைய முகத்தை யுடையார் (ஆகிய பிரமதேவர்). 'அரங்கம்' எனற்பாலதை 'ரங்கம்' என்றதற்கு நியாயம் அஉ-வது பாட்டுரையிற் காண்க.

அம் தரங்கத் தான நத்தன்—அழகிய கடலைத்தானமாகவுடைய விட்டுணு, (இவ்விருவருடைய) அந்தரங்கத்தான் நனத்தன்—அந்தரங் கத்தில் உள்ளவர் (ஆகி எங்கும் வியாபித்த) விசாலமுடையார். நனம் விசாலப்பொருட்டென்பது பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டில் முத லடியில்வரும் நனந்தலைக்கு நச்சினர்க்கினியர்கூறும் உரையிற்காண்க.

**பா - அக.** நே (அன்புடைய) மவுணர் (நாயகர்) வைப்பு (இருப் பிடத்தை) அடுக்கும். நேம உணர்வைப் படுக்கும் (படும்படிசெய்யும்).

தேமலரோன்.........நின்ற — பிரமன், சிரத்தையும், விட்டுணு, பாதத்தையும் தேடும்படி (தழற்பருவதமாக) நின்ற.

**பா - அ௨.** கேள் - புருடன். இல்—மனைவி. முன்னீர் முத்து அம் தாரீர் என்—கடற்கணுண்டாகிய முத்துக்களாலாய அழகியமாலை யுடையவரோ என்கின்ற. முன் நீர் முத்தம் தாரீர்—முதலில் நீர் முத்தம் கொடும்.

முத்தி (யை) மா (பெரிய) சுப (மான) தவம் (தவத்தைப்) படையார் மாட்டு (இடத்தில்) நல்கார் (கொடுக்காதவர்). இராமனுக்கு ஈ (ந்த) பாசுபத அம்படையார். இத் தலபுராணத்தில் இக்கதை கூறப்பட்டுள்ளது.

திருவானைக்காப் புராணம் குபேரன் வழிபடுபடலம் "அற்றைத் தினம்" என்னும் கக-வது பாட்டில் இராமன் எனற்பாலது ராமன் என வழங்கப்பட்டிருப்பது காண்க. சிந்தாமணியார் ராசமாபுரி என வழங்கியிருப்பதும் நோக்குக.

'வேய் யாது' 'வேயாது' என்று ஆவது போல 'நல்கார் ராமனுக்கீ' 'நல்கா ராமனுக்கீ' என்றுனது.

இலக்கணக்கொத்து ஒழிபியல் ௧0அ - வது சூத்திரத்துரையில் **வேள்விசெய்தவன்** எனற்பாலது **செய்தவேள்வியன்** என வருமென்றதுபோல **ராமனுக்துப் பாசுபத அம்படை ஈந்தார்** என்பது **ராமனுக்த ஈ(ந்த) பாசுபத அம்படையார்** எனப்பட்டது.

**பா - அ௩.** போர் நவில் களத்தில் நேர்நனை வாள் தாக்கு அழிக்கும் — யுத்தஞ்செய்யும் போர்க்களத்தில் பொருவோரை வாள்களினது தாக்குதல் அழியும்படி செய்யும். "நவிலல் சொல்லுதல் பண்ணற்பேர்" (நிகண்டு).

மயிர் போற்றும் அபிமானி நெஞ்சில் நேர் நனை வாட்டாக் கழிக்கும் - மயிரைப்பேணும் அபிமானமுடையார் மனதில் (அவர்களுக்கு) உண்டாகும் நரையானது வாட்டி (அவர்களை)க் கழியும்படி செய்யும்.

கார்கஞ்சு உண் வாய்ப் பவளத்து அத்தன். வாய்ப்பவள் அத்தத்தன் (பாதியை யுடையார்).

**பா - அ௪.** நிச்சத் தபோதனம் செய்—நித்தியமான தவமாகிய பொருளைத்தேடும். சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகம் "வென்றியாக்கலும்" என்னும் பாட்டினுரையில் நச்சினார்க்கினியர், செய்தல்—தேடுதலெனப் பொருள்கூறி யிருப்பதுகாண்க. தவமே தனமாக உடையார் என்னும் பொருளில் தபோதனர் என்னும் மொழிவழங்குதல் உண்டு. முனிவர் வாசஞ்செய்யும் வனங்கள் தபோவனங்க

ளென்று கூறப்படுகின்றன. தபோநிதி தபோபலம் என்னும் பதங்களும் வழங்குகின்றன.

நிச்சத்த போதனஞ்செய்—சத்தமில்லாத போதித்தலைச் செய்கின்ற. திருவிளையாடற்புராணம் கடவுள்வாழ்த்தில் "கல்லாலின்" என்னும் பாட்டில் "சொல்லாமற் சொன்னவனை" என்றதை ஒத்திட்டு நோக்குக.

இச்சை (காமத்தை) உள்ளத்து இருத்து அஞ்சு (பூங்கணை) எய்வார். மெள்ளத் திருத்தஞ் செய்வார்.

பா - ௮௫. மாளா நின்றார் துஞ்சு ஆன்மா நீளாதே விக்கு அடுக்கும்—(வாழ்நாள்கழிந்து) அந்தியதசையுறுவோர் சாகும் (உடலை விட்டு நீங்கும்) உயிர் நெடும்பொழுதிராமல், (அவர்கள்) விக்கல் பொருந்தும்.

வது வரர் துஞ்சு ஆல் மால் நீளாதேவிக்கு அடுக்கும்—மணமகன் மணமகளானோர் ஆலிலைமீது தூங்கும் விட்டுணுவையும் அவர் தேவியாகிய நீளாதேவியையும் (முறையே) ஒத்திருக்கும்.

தாளே (தமது திருவடிகளே) மனத்து எழுதப்பட்டார் (எழுதப்பட்டனபோல நீங்காது வைக்கப்பெற்றவர்கள்). கனத்து, எழு (கின்ற) தப்பு அட்டார்.

பா - ௮௬. சேனை நேர் கால் துவசம் உறும் — சேனை போர் செய்யுங் காலத்தில் கொடியைப் பொருந்தியிருக்கும். அச் சேனையின் எழும் தூளும் நேர் (எதிர் அடிக்கின்ற) காற்று வசம் உறும்.

வார் காதில் தோடு அலங்கு (அசைகின்ற) அம்பைக்கு (உமாதேவிக்கு) அத்தன் (பாதியானவர்). அம்பை, உமாதேவிக் கோர்நாமமென்பது காஞ்சிப்புராணம் நகரப்படலம் ௧௨௪ - வது பாட்டில் "அலக்கணீத் தறமெண்ணான்கு மம்பையே வளர்க்கு நீரால்" என்பதாலறிக.

பாடலங் கம்பை (யென்னும் தீர்த்தத்தையுடைய) கத்தன். பாடலங் கம்பையைப்பற்றி இந்தத் தலபுராணத்தைப்பார்க்க.

பா - ௮௭. தையலர் நெய் அரி இன் கோதை உறும் — மாதர் நெய்யையும் வண்டுகளையும் உடைய கூந்தலைப் பொருந்தியிருக்கும்.

மனம் நெய்யரி இன் கோதை உறும்—மனமானது பன்னாடையைப்போல (ச்சாரத்தை ஒழுகவிட்டுச்) சக்கையைப் பொருந்தும்.

மையலை ஓர் வேதியன் தீரப் பண்ணினான். இத் தலபுராணத்தில் காமவேதியனுக்குக் காமவேட்கை தீர்த்த சருக்கத்தைப் பார்க்க.

விண் நின்றும் மண்மீது இயன்று (அம்மண்ணை) ஈர் அப்பு (சலமாகியகங்கையை) வேணியில் அண்ணினன்.

**பா - ௮௮.** வர்த்தன ஞானத்தை விழைவார் நிர்த்தனத்தும் ஆதரம் ஆம்—விருத்தியுடைய ஞானத்தை விரும்புவோர் பணமில்லாமையிலும் ஆசை யுறும். நிர்த்தனம்—தனமில்லாமை.

தாதா பொருள் நிர்த்தன மாதர் அம் ஆம்—கொடையாளர் பொருள் நாடகப் பெண்களாகிய வேசையரது அழகு போலப் பலருக்கும் பயன்படும். நீதிநெறிவிளக்கத்தில் "பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்" என்பதன் கருத்து இங்குக் கூறப்பட்டது.

பாய் அத்த மானர்—பாயுந் தன்மையுடைய, கையின்கணுள்ள, மானையுடையார். போர்க்கு ஆயத்தம் ஆனார்—யுத்த சன்னத்தரானார். பணைத்தல்—பிழைத்தல்—பிழைசெய்தல்.

**பா - ௮௯.** ஒர் சொல்லினோர் தங்கள் உண்மை நேர் சொல்லிக் காக்குறும்—சத்தியவாசகர் தங்கள் மெய்ம்மையை, சரியானதைச் சொல்லி, காக்கும்.

வயல்வளம் நேர் சொல் இக்கு ஆக்குறும்—வயலின் வளமானது (அவ் வயலிடத்துட்) பொருந்திய நெற்பயிரைக் கரும்பு போலாகச் செய்யும்.

வாழ்த்தும் உழுவல் ஆர் (நிறைந்த). தாழ்த்தும் முழு வல்லார்.

**பா - ௯0.** ஓடையின் நீர் நீள் தரு உந்து திக் கயம் மேய்—அகழியின் சலத்தை உயர்ந்த மரங்களைத் தள்ளும் (தன்மையுடைய ஐராவதமுதலிய) திசையானைகள் குடிக்கும்.

திருவானைக்காப்புராணம் கோச்செங்கணர் வழிபடுபடலத்தில் "மருந்துதரு வனமொழியார்"என்னும் ௬-வது பாட்டில் 'மரு உந்து' 'மருந்து' என்றாயதுபோலவும் சிவஞான யோகிகள் கம்பரந்தாதியில் "வாவிக்கமல" என்னும் ௭௨-வது பாட்டில் நான்காவது அடியில் 'கு அமலம்' 'கமலம்' என்றாயது போலவும் இங்குத் 'தரு உந்து' 'தருந்து' என்றாயது. திக்கயம், திக்கையமென்றதற்கு நியாயம் இந்நூலில் ௧௬-வது பாட்டுரையிற் காண்க. அகழி மிக அகன்றதென்னும் பொருள் புலப்பட அகழியினீரைத் திக்குயானைகள் குடிக்குமென்றது அதிசய அலங்காரம். அகழிக்கும் நிலையிலேநின்று பூமியைத் தாங்காநின்ற திக்கு யானைகளுக்கும் இடையே நெடுந்தூரம் உளதாகவும் இப்படிக்கூறல் பொருந்தாதென்பாரும் அளவையிகந்த அதிசய வலங்காரத்துக்கும் அளவையுண்டெனக் கூறி இது பொருந்தா தென்

பாரும் முறையே இதனடியிற் கூறிய இரண்டு உதாரணங்களையும் நோக்குக.

"இழக்கமர்ந்த வேழுலகுந் தமக்குமக ழெனவுடுத்த விடங்கு மேலை
வழக்கமர்ந்த வேழுலகுந் தமக்குமதி லெனவுடுத்த மதிலும்......"

(தணிகைப்புராணம் நகரப்படலம்)

"அய்யோ வகலல்குல் சூழ்வருநற் காழித்தேர்
வெய்யோற் கனேகநாள் வேண்டுமே—கைபரந்து
வண்டிசைக்குங் கூந்தல் மதர்விழிகள் சென்றுலவ
வெண்டிசைக்குங் காணு திடம்."

(தண்டியலங்காரத்தில் ஓர் உதாரணப்பாட்டு?)

தருங்கை நீடு அரும் துதிக்கை ஏய்—கொடுக்கும்கை நெடுங்காலம் அருமையான புகழைப் பொருந்தும்.

குறங்கு நீள்தரும் துதிக்கை ஏய் — தொடையானது நீண்ட யானைத் துதிக்கையை யொக்கும்.

கற்பினர் நீடு அருந்துதிக்கு ஐயம் ஏய்—கற்புடையமாதர் (கற்பு) மிகுந்த அருந்ததிக்கு (அவள் கற்பில் முதன்மையுள்ளவ ளென்ற நிச்சயத்தை நீக்கிச்) சந்தேகத்தைப் பொருத்தும். அருந்ததி அருந்துதி என்றுமென்றது சிவஞானயோகிகள் "திருமுல்லைவாயி லந்தாதியில் "அருந்துதியான்" என்னும் பாட்டிலால் அறிக. "ஓகை நீடினர்" என்பதிற்போல நீடு மிகுதிப்பொருளில்வந்தது. தணிகைப் புராணம் களவுப்படலம் ௧௧௭ - வது பாட்டில் "நிலத்தலைப் பேரின்ப நிமலனீடினன்" என்பதையும் நோக்குக.

நாடு சங்கை ஆலம் அண்டை ஓட்டு அத்தன்—(சனகாதி நால்வர் தெளியும்படி அவர்கள்) நாடிய சந்தேகங்களைக் கல்லாலின் பக்கத்திலே (எழுந்தருளியிருந்து) அகற்றிய கடவுள். சிவஞான யோகிகள் கம்பராந்தாதி ௭௭-வது பாட்டில் **சங்கடம் ஆதங்கப்பற்று, சங்கட வாதங்கப்பற்று** என்று சந்திசேராமல், **சங்கட மாதங்கப்பற்று** என்று கூறப்பட்டதுபோல, **ஆலம் அண்டை** என்பது **ஆலவண்டை** எனச் சந்திசேராமல் தொடைநோக்கி **ஆலமண்டை** எனப்பட்டது.

ஆல் அ மண்டை ஓட்டு அத்தன்—(தரித்திருக்கும் கையுடன்) அசையும் அந்த (ப்பிரம) கபாலமுள்ள கையையுடையவர்.

ஆலம் அண்டு ஐ ஓட்டத்தன்—விடம் (உண்ணுங்கால்) பொருந்திய அழகிய அதரத்தை யுடையார்.

**பா - ௬௬.** நிர்வாசன் அன்பு உணரும்:—வல்லாரல்லார் செய்யும் அன்பை மாதர் கருத்துட் கொள்ளார் என்னும் கருத்துடையது.

பாதுகம் நிர்வாகனன் புணரும் — பாதரட்சையை வாகனமில்லாத பாதசாரி (காலிற்) பொருந்தும்.

மா சன்மார்க்கத்தர். ஒன்பதிற்றேழு (அறுபத்துமூன்று) தாசன்மார்க்கு (அடியார்க்கு) அத்தா. காஞ்சிப்புராணம் சகோதர தீர்த்தப் படலம் கூ - வது பாட்டில் தமயன்மார் என்பதுபோலத் தாசன்மாா ஒருமையில் மாா விகுதிபுணர்ந்தது. சீவக சிந்தாமணி கனகமாலையாரிலம்பகம் "விருந்தவள்" என்னும் பாட்டுரையில்வரும் 'தோழன்மார்', என்பதையும் காசிக்கலம்பகம் கூஉ - வது பாட்டில் 'விரிஞ்சன்மார்' என்பதையும் பாாக்க.

பா - கூஉ. நிச்சம் தேகப்பயன் கொள்--நித்தமும் உடம்பு பெற்றதனுலாய பயனைக் காள்ளும்.

சீவகசிந்தாமணி மண்மக ளிலம்பகத்தில் "நொச்சிமாமலா" என்னும்பாட்டில் "நிச்சம் கூற்றினுக் கிடுபவா" என்பதில் நிச்சம் தினமும் என்னும் பொருளில் வருவதுகாண்க.

நிச்சந்தேகப் பயன்கொள்—சந்தேகமில்லாத நிச்சயமான அர்த்தத்தைக் கிரகிக்கின்ற.

உய்கை வரப் படைத்தார். வைகை வரப்பு அடைத்தார்.

பா - கூங. நோாா அணி (பகைவராது படைஅணி) அங்கு ஊர். நேர் ஆரணியம் (வனம்) கூா (மிகப்பெறற).

மதியவரை (மதியையுடையவரை)ச் சாரலார் (சேராதவா).

பா-கூச. நீள் தமது வைப்பு (இருப்பிடம்) ஒழியும் (நீங்கும்). நீட (மிக) மதுவை (தேனை)ப் பொழியும் (சொரியும்).

நாடு உமையைப் பங்கின் இருத்து அத்தன். அங்கி நிருத்தத்தன்.

பா - கூரு. சிவ பூசையை துன் பட்டுப்பை நீறு உள்ளிப் பூசித்துவக்கும்—(சிவபூசை செய்வோா அச்) சிவபூசையை (த்தம்மிடத்துப்) பொருந்தியுள்ள பட்டுப்பை (யின் கணுள்ள) விபூதியை மதித்துப் பூசி ஆரம்பிக்கும்.

மா மெய்யரைத் துன்பு அட்டுப் பைநீல் துள்ளிப் பூசித்து உவக்கும்—மகத்துவமுடைய துறவோரை (க்கண்டவுடனே) துக்கததைத் தொலைத்து மன்பதை (சந்தோடத்தால்) துள்ளி (அவர்களுக்கு) ப் பூசனைசெய்து களிக்கும்.

எட்டு ஆன திக்கு உடை யார்—அட்டதிக்குகளையும் ஆடையாக உடுத்தவர்.

வேதற்கு எட்டா நதிக்கு உடையாா—(பிரமன் காணுத சடையில் உறைவதனுல் அந்தப்) பிரமனுக்கு எட்டாத நதிக்கு உடையவா,

**பா-கூகூ.** ஆர்ந்த பகற்றேர் அம் கா அண்ணச் சாருறலும் நேர்ந் தழைக் கப்பு எற்றிடும்—சூரியன் தங்கியதோ அழகிய சோலையைச் சமீபிக்கும்படி சார்தலும் நொய்ய இலைகளையுடைய (மரக்) கொம்புக ளால் எற்றப்படும். சீவக சிந்தாமணி முத்தியிலம்பகத்தில் "நீரணிமா டவாவி நேர்ம்புணை" என்னும் ருகூ-வது பாட்டில் 'நேர்மைபுணை' 'நேர்ம்புணை' என்றனது போல 'நேர்மை தழை' 'நேர்ந்தழை' யென் றுயது. 'கூர்ம்படை' 'கூரங்கணை' என்பவற்றையும் ஒப்பு நோக்கிக் கொள்க.

விருந்து அங்கு ஆவணச் சார் உறலும் நேர்ந்து அழைக்கப் பெற் றிடும்—விருந்தினா அங்கு தெருப்பக்கம் வருதலும் (விருந்தேற்போ ரால்) எதிர்கொண்டழைககப்படும்.

தீர்ந்தமைக்காத் தண்டம் இழைப்பாள் துறுவான் தன்பங்கு கொள் உமைகோன் — (முன்ஓர் காலத்து யோகஞ்செய்து) தன்னைப் பிரிந்திருந்தமைக்காகத் தண்டனை செய்யும் கருத்துடையளாய்ப்) பின் ஒருகாலத்தும் பிரியாவண்ணம் தேகத்தோடு தேகமாகப்) பொருந் தும்படி தம்முடைய (இடப்) பாகத்தை (முன்பிரிந்தமைக்கபராதம் போலக்) கொண்ட உமாதேவியாருடைய மணாளர். தண் தமிழைப் பாடுறுவார்.

**பா - கூஎ.** யாழ் உளையார் நீழல் ஒத்தலில் கதிர்க்கு நீழல் என்றும் பெயர் ஆம்—யாழின் ஓசைபோலும் மொழியுடைய மாதரது நிழலை ஒத்திருப்பதினாலே ஒளிக்கு நீழலென்றும் (ஒரு) பெயர் பொரு ந்தும். மாதர்மேனி மின், அவா மேனியின்நிழல் மின்னின் பிரகாச மொக்கும் என்னும் கருத்துப் புலப்பட இவ்வாறு கூறியது.

கவிராசபண்டித ரியற்றியுள்ள சௌந்தரியலகரியில் "இறைவி நின்னிதழ்ச்சிவப்பு" என்னும் பாட்டில் அம்பிகையின் இதழ் விம்பத் தை (ஒளியைப்) பெற்றுக் கோவை விம்பமெனப் பெயர் பெற்ற தெனக் கூறியதை ஒப்பு நோக்குக.

புற்குவைக்கு நீழல் என்றும் பெயரா—கம்பம்புற் குவியலுக்கு (அதன்) நிழல் எக்காலமும் (அதினின்று) நீங்காத.

வேழக்கு (யானைக்கு) இரக்கம் உந்தி ஓடுற்றார். இரக்க, முந்தி, ஓடு உற்றார்.

**பா - கூஅ.** மாறில் மனைப்பெண்டிர் அம் கூழ் ஆருநரா நீறட் டிப் பால் அன்னம் நேர்—(வீட்டுக்குரிய வளங்கள்) மாறுதல் இல்லாத மனையில் வாழும் மடவார் நீர் மிகுந்த கூழை யுண்பவர்களை (அக்கூழ்) உண்ணுமல் தடுத்துப் பாலோடு கலந்த அன்னத்தை (உண்ணும்படி) கொடுக்கும்.

தவமாதா அங்கு ஊழ் ஆரும் நரை நீறு அட்டிப் பால் அன்னம் நேர்—தவஞ்செய்யும் மாதா அங்கு முறைமை தங்கிய வெண்மையான விபூதியை (மேனிமுழுதும்) அப்பியணிந்து வெண்மையான அன்னத்தை ஒக்கும்.

சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் "நாடகநயந்து காண்பார்" என்னும் ௩௬௬௪-வது பாட்டுரையில் "உண்பாரை நீறட்டியு மென்றது—உண்பாரை யுண்ணுமற றடுத்து மென்றவாறு" என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதைககாணக. காஞ்சிப்புராணம் கழுவாய்பபடலம் "நழையிழை" என்னும் ௩௩௬ - வது பாட்டில் "மணத்து களட்டி" எனபதில் அட்டுதல் என்னும் பதம் வருதல் காண்க.

படலைத் துழாயினுன்—துளவமாலையுடையார். உடலைத் துழாயினுன்—உடலைக்கலந்தார்.

பா - ௬௬. ஆர பிரியைகட் குமரா நீர பிரியம் ஆள்வு உறும் என் — (மனைவியாக்குக்கூறிய இலக்கணம்) நிறைந்த (மனைவியருடுங்கால் அம்) மனைவிகளைக் குமரா நீர (எமடால் இரங்கிப்) பிரியத்தை ஆள்வீராக என்கின்ற. சீவகசிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் "தருமணற்றருப்பை" என்னும் அ௬-வது பாட்டில் "ஆர்ந்தசமிதை" என்பதைச் "சமிதைக்குக் கூறுமிலக்கணங் குறைவறற சமிதை" என்றார் நச்சினார்க்கினியர.

அக்குமரரைப் பகைஞர நீர பிரிய மாள்வு உறும் என்—அந்தக் குமரரை (அவர) பகைவர (நீர) கோபிகக எங்களுக்குச் சாவு உறும் என்கின்ற. சீவகசிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் "அலர்ந்த வந்தாமரை" என்னும் எஉ - வது பாட்டுரையில் "நீரபிரிநது—கோபிதது" என நச்சினார்க்கினியர கூறியிருப்பது காண்க.

வீட்டுக்கடைக்கு அண்ணியார (அண்ணியவர). மாட்டு (இடத்தில்) கடைக்கணியார—கடைக்கண்பாரார.

பா. - ௯00. மாடு ஆர பொருநை நீள் தாம்பிர பலம் சேர—பக்கத்துத்தங்கிய பொருநையாறு மிகுந்த செம்பாகிய பலனைப்பொருந்தும். பாவாணர நீடு ஆம் பிரபலம் சேர - கவிஞர நெடுங்காலம் (நிலைநிற்பது) ஆகிய பிரபலததை அடையும். பழக்கடை நீடு ஆம்பிரபலம் சேர — பழக்கடை நீண்ட மாம்பழத்தைப் பொருந்தியுள்ள.

தோடார நளின ஆதனத்தன்—பிரமன். நளி (குளிர்ச்சியுடைய) நாத (ஓசையுடைய) நத்தன் (சங்குடையமால்) நள்ளின் (நடுவிலுள்ள) நாதன் அத்தன்.

---

MAHAMAHOPADHYAYA